# ரெட்டி மலர்

உறவை வளர்ப்போம் உணர்வை காப்போம்

தமிழ் மாத இதழ்

REDDY MALAR, Tamil Monthly

மலர் : XVIII | இதழ் : 5 | ஆகஸ்ட் 2024 | விலை. ரூ.15/–

Vol. : XVIII | Issue No : 5 | AUGUST 2024 | Price. Rs.15/


## டாக்டர்.அ.வெ.ரா.கிருஷ்ணசாமி ரெட்டியார் திருவுருவ சிலை திறப்பு




## சாத்தூர் நகர ரெட்டி நல சங்க பொதுக் குழு மற்றும் பரிசளிப்பு விழா





செய்தி உள்ளே 1

உறவை வளர்ப்போம்! உணர்வைக் காப்போம்!

என்றென்றும் உங்களுடன்

# ஹரிணி ஜுவல்லர்ஸ்







## தங்கநகை சேமிப்புத் திட்டத்தில் செய்கூலி, சேதாரம் இல்லை

64-A, 65, சிந்தாமணி பஜார், (அண்ணா சிலை அருகில்) திருச்சி - 2

**Cell: 0431-2704916, 81488 24916** e-mail: harinijewell2014@gmail.com

# ரெட்டி மலர்

நிறுவனர் :
"கல்வி காவலர்" கே.ரெங்கராஜன் (KRT)

மலர் : XVIII ஆகஸ்ட் 2024 இதழ் : 5



| | | |
|---|---|---|
| வெளியீட்டாளர் | : | V. செல்வராஜூ |
| ஆசிரியர் | : | R. இராஜசேகரன் |
| கௌரவ ஆசிரியர் | : | R. புகழேந்திரன் |
| இணை ஆசிரியர்கள் | : | R. அன்பழகன் |
| | | P. ஜனார்த்தனம் |
| துணை ஆசிரியர்கள் | : | D. மணிவாசகன் |
| | | V. ஜெயக்குமார் |
| சட்ட ஆலோசகர் | : | R. பாபு B.A.,B.L., |

**விற்பனைப் பிரிவு மேலாளர்**

R. காமராஜ்

**விற்பனைப் பிரிவு நிர்வாகிகள்**

R. நந்தகுமார்

N. சுந்தரராஜூ

M. ஜெயபிரகாஷ்

**விளம்பரப் பிரிவு மேலாளர்கள்**

J. ஐயப்பன்

P. மோகன்

**விளம்பரப் பிரிவு நிர்வாகிகள்**

S. காமராஜ்

R. பார்த்திபன்

S. பூவேந்தரசு

**ஆலோசனைக் குழு**

L. தமிழரசன், சென்னை
திருமதி.தேவிமோகன்
S. மோகன், கோவை
N. பெரியசாமி, திருச்சி
R.V. செல்வகுமார், விளாத்திகுளம்
R. சண்முகைய்யா, RSR சிவகாசி
P. தாமோதரன், தாம்பரம்
M. கிருஷ்ணசாமி, சென்னை
T. ரவிச்சந்திரன், விழுப்புரம்
R.D. ராஜமுருகன், விருதுநகர்
S. சதீஷ்குமார், மதுரை (மோனிகா)
S. ராமராஜன், திண்டுக்கல்
K. சூரியகுமார், தஞ்சாவூர் மாவட்டம்


## இதழின் உள்ளே........


- ஆசிரியர் தலையங்கம் – 4
- நிறுவனத்தலைவர் மடல் – 5
- தமிழ்நாட்டு இரும்பு மனிதர் ஓ.பி.ஆர் – 6–8
- குரூப் 1 முதன்மை தேர்வு வழிகாட்டுதல் நிகழ்ச்சி Dr.J.விஜயராணி IAS தொடங்கி வைத்தார் – 9–11
- சார்புச் செயலாளராக திரு.R.ரமேஷ்குமார் நியமனம் – 12
- ஓ.பி.ஆர் அறக்கட்டளை சார்பில் 78வது சுதந்திர தின விழா – 13–15
- விளாத்திகுளம் ரெட்டி ஜன சங்கம் – 16
- டாக்டர்.அ.வெ.ர.கிருஷ்ணசாமி ரெட்டியார் திருஉருவ சிலைத் திறப்பு – 21–23
- தொண்டு நிறுவனங்களுக்கான பயிற்சி – 24–25
- சாத்தூர் நகர வட்டார ரெட்டி நல சங்கம் – 26–27
- விவசாயப் பகுதி – 28–29
- உயர்ந்த தெய்வ பக்தி – 30
- ஆன்மீகப் பகுதி – 31
- திருமணத் தகவல்கள் – 33–34


## அன்பான வாசகர்களே!

தபால் பெட்டி பகுதிக்கு உங்களின் கருத்துகளை எழுதி அனுப்புங்கள். நிறையோ, குறையோ உங்கள் கருத்து எதுவாக இருந்தாலும் அஞ்சலட்டையில் உங்களின் எண்ணங்களை எழுதி அனுப்புங்கள். தன்னம்பிக்கை வரலாறு, சாதனையாளர்களின் வெற்றி செய்தி, கதைகள், கட்டுரைகள் மற்றும் ரெட்டியார் சமூக சங்க செய்திகளை எழுதி அனுப்பலாம். எங்களுக்கு வரும் மடல் மூலம் உங்களின் தேவை அறிந்து கொண்டு அதற்கேற்ப சிறப்பான கட்டுரைகளை உங்களுக்குத் தரமுடியும். கடிதங்களை **ரெட்டி மலர்** அலுவலகத்திற்கு அனுப்ப வேண்டுகிறோம்.


## அலுவலக முகவரி

எண். 34A, கங்கையம்மன் கோவில் தெரு,
ஜாபர்கான்பேட்டை, சென்னை – 600 083.
: 044 - 2485 3333, 96888 77700.
E-mail Id : reddymalar06@gmail.com,
Website : www.reddymalar.com,
Twitter : @malar_reddy.twitter.com
Matrimony Online Website :
www.reddymatrimony.co.in
Subscribe : YouTube : oprchannel
http://youtube.com/@oprchannel1157

# சாதி வாரி கணக்கெடுப்பு அவசியம் தானா?

**தலையங்கம்**

சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பு என்பது புதிதாக உருவாக்கப்பட்ட தத்துவம் அல்ல. சமூகத்தில் அனைவரது நலம், வளர்ச்சி, சமநிலை ஆகியவைகளைக் கருத்தில் கொண்டு அரசு செயல்பட சாதிவாரி கணக்கெடுப்பு அவசியமாகிறது. இந்தியா விடுதலை அடைவதற்கு முன்பிருந்தே 1872ம் ஆண்டில் தொடங்கி 1931ம் ஆண்டு வரை ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் சாதிவாரி மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்பட்டது.

1941ம் ஆண்டில் இரண்டாம் உலகப்போரின் காரணமாக மக்கள் தொகை கணக்கெடுப்பு முயற்சி யானது நிறுத்தப்பட்டது. 1961ம் ஆண்டு முதல் பட்டியலின சாதிகள் மற்றும் பழங்குடியினர் கணக்கெடுப்பு, மக்கள்தொகை கணக்கெடுப்புடன் சேர்க்கப்பட்டு நடைமுறைபடுத்தப்பட்டது.

முதலாவது பிற்படுத்தப்பட்டோர் வகுப்பு ஆணையம் 1953ம் ஆண்டில் காகா கலேல்கர் என்பவர் தலைமையில் அமைக்கப்பட்டது. அதன்படி ஒரு பிரிவினர் சமூக ரீதியாகவும், கல்வி ரீதியாகவும் பின்தங்கியவர்களாகக் கருதப்பட சாதி முக்கியக் காரணியாக எடுத்துக்கொள்ள எத்தகைய அளவுகோலாக கருத்தில் கொள்ள வேண்டும் என்பதை அப்போதுதான் தீர்மானிக்கப் பட்டிருந்தது.

அடுத்து 1979ம் ஆண்டில் இரண்டாவது பிற் படுத்தப்பட்டோர் ஆணையமானது B.P.மண்டல் அவர்களின் தலைமையின் கீழ் அமைக்கப்பட்டது. மண்டல் ஆணைய அறிக்கையின்படி பட்டியலின சாதிகள் மற்றும் பழங்குடியினர் எண்ணிக்கை யானது மொத்த மக்கள்தொகையில் 22.56 சதவீதம் எனவும், இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் 52 சதவீதம் உள்ளனர் எனவும் கணக்கிடப்பட்டது. இதன் அடிப்படையில் மத்திய கல்வி நிறுவனங்களிலும், வேலை வாய்ப்புகளிலும் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 27 சதவீத இடஒதுக்கீடு அமல்படுத்தப்பட்டது.

இந்தியாவில் கடைசி மக்கள்தொகை கணக்கெடுப்பு கடந்த 2011ம் ஆண்டில் மேற் கொள்ளப்பட்டது. அதற்கு அடுத்து 2021ல் 16வது மக்கள் தொகை கணக்கெடுப்பு கொரோனா பரவல் இருந்த காரணத்தால் மேற்கொள்ளப்படவில்லை. அடுத்த மக்கள் தொகை கணக்கெடுப்பு எப்போது என்பதும் இதுவரை தெளிவுப்படுத்தப்படவில்லை.

இந்நிலையில் மக்கள் தொகை கணக்கெடுப்புடன் சாதிவாரி கணக்கெடுப்பு எடுக்கப்பட வேண்டும் என்ற குரல் இந்தியா முழுவதும் ஒலிக்கத் தொடங்கி யிருக்கிறது. இதுகுறித்து நாடாளுமன்றத்திலும், மாநில சட்டமன்றத்திலும் சூடான விவாதங்கள் நடந்துவருகின்றன.

குறிப்பாக, பீகார், கர்நாடகம், ஒடிசா, ஆந்திரா, தெலுங்கானா, ஜார்கண்ட் போன்ற மாநிலங்கள் சாதிவாரி மக்கள் தொகை கணக்கெடுப்பை 2008ம் ஆண்டின் புள்ளிவிவர சேகரிப்புச்சட்டத்தை பயன்படுத்தி கணக்கெடுப்பு நடத்தியுள்ளன என்பன போன்ற அனல் பறக்கும் விவாதங்கள் தமிழக சட்டப்பேரவையில் அண்மையில் நிகழ்ந்துள்ளது.

1901 ஆண்டு கணக்கெடுப்பின்படி 1,646 சாதிகள் உள்ளன என்றும், 1941ன் கணக்கெடுப்பின்படி 4,147 ஆக இது உயர்ந்தது என்றும் புள்ளிவிவரங்கள் தெரிவித்துள்ள நிலையில் 1951 ஆம் ஆண்டு முதல் சாதிவாரி கணக்கெடுப்பு கைவிடப்பட்டது. ஆனால் பட்டியலின பழங்குடியினர் கணக்கெடுப்பு மட்டும் தொடர்ந்தது.

2011ம் ஆண்டில் நடந்த மக்கள்தொகை கணக்கெடுப்பில், சாதி தொடர்பான தகவல்கள் (SECC) சேகரிக்கப்பட்டாலும் அவை வெளியிடப்பட வில்லை. காரணம் இந்தக் கணக்கெடுப்பு பல குறைபாடுகள் கொண்டது, நம்பகத்தன்மையற்றது, இடஒதுக்கீடு கொள்கையின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்த முடியாது என்றும், சாதி வாரி கணக்கெடுப்பை நடத்துவது நிர்வாக ரீதியாகக் கடினமானது என்றும், சிக்கலானது என்றும் மத்திய அரசு விளக்கமளித்துள்ளது.

மத்திய, மாநில அரசுகளின் வெவ்வேறு பட்டியல்களின்படி சாதி வகைகளில் உள்ள வேறுபாட்டை சுட்டிக்காட்டி மத்திய பட்டியலில் 2,479 பிற்படுத்தப்பட்ட சாதிகள் உள்ளன. ஆனால் இவை அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் பட்டியல்களின்படி 3,150 சாதிகள் உள்ளன என்று தெரிவித்துள்ளது. மேலும், மக்கள் தொகை கணக்கெடுப்பின் போது சாதி தொடர்பான கேள்வியைக் கேட்டால், அதற்குப் பல ஆயிரம் சாதிப் பெயர்கள் பதிலாக வரும். ஏனெனில், சாதி குறித்துக் கேட்கும்போது மக்கள் தங்கள் குலம், கோத்ரம், துணை சாதி என ஒன்றுக்கொன்று மாறுபட்ட வகையில் பயன்படுத்துவதால் கணக்கெடுப்பு தரவுகளில் குழப்பம் ஏற்படும் என்று மத்திய அரசு விளக்கமளித்துள்ளது. துணை சாதிகள் ஏராளமாக உள்ள நிலையில் இவையும் இடத்திற்கு இடம் அதாவது மாவட்டத்திற்கு மாவட்டம், மாநிலத்திற்கு மாநிலம் வேறுபடலாம். இத்தகைய துணை சாதிப் பிரிவுகளை எந்த சாதிப் பிரிவுகளின் கீழ் கொண்டு வருவது என்பதும் மற்றும் அதேபோல் எந்தெந்த சாதிப் பிரிவுகளை OC, BC, MBC, SC, ST கீழ்கொண்டு வருவது என்பதிலும் கருத்தொற் றுமையை பெறுவது மிகக் கடினம். எனவே இந்நிலையில் இப்பணியை மாநில அரசு மேற் கொள்ள மத்திய அரசு விரும்புகிறது.

சமீபத்தில் தமிழக சட்டப்பேரவை மக்கள்தொகை கணக்கெடுப்பு பணியுடன் சாதிவாரி கணக்கெடுக்கும் பணியினையும் எடுக்க வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது. மக்களுக்கு கல்வி, பொருளாதாரம், வேலை வாய்ப்பு, சம உரிமை வழங்க சாதிவாரி கணக்கெடுப்பு அவசியம் எனவும், சாதிரீதியில் மக்கள் தொகை கணக்கெடுப்பை நடத்துவதால் பல கேள்விகளுக்கு விடை கிடைக்கும் என விவாதத்தின் போது சட்டமன்ற உறுப்பினர்கள் பலரும் கருத்து தெரிவிக்கின்றனர்.

இடஒதுக்கீடு தொடர்பாக மாநில அரசுகள் நட–வடிக்கை எடுத்தால் போதிய புள்ளிவிவரங்கள் இல்லை என்று கூறி, உச்ச நீதிமன்றம் அதை ரத்து செய்கிறது. எனினும் அனைத்து பிரிவினரும் சமூகத்தில் தங்களுக்குரிய நியாயமான பங்கினை பெற சாதிவாரி கணக்கெடுப்பு அவசியம் தேவை.

ஆனால் இந்த சாதிவாரி கணக்கெடுப்பு சாதி அரசியலை வலுப்பெற செய்யும் என்றும், இது ஓட்டு அரசியலுக்கு மட்டுமே பயன்படும் என்றும் பலர் அச் சம் தெரிவிக்கின்றனர். இந்நிலையில் நமக்கான இட ஒதுக்கீடு ஒரு கேள்விக்குறியாகவே உள்ளது.

R. இராஜசேகரன் ஆசிரியர் குழு

# ரெட்டி இளைஞர் பேரவை

அலுவலக முகவரி : எண். 34A, கங்கையம்மன் கோவில் தெரு, ஜாபர்கான்பேட்டை, சென்னை – 600 083.
044 - 2485 3333, 96888 77700. E-mail Id : reddymalar06@gmail.com
Website : www.reddymalar.com, Twitter : @malar_reddy.twitter.com, website : www.reddymatrimony.co.in


## நிறுவனத்தலைவர் மடல்.....



**V.செல்வராஜு**
**நிறுவனத்தலைவர்**

**அ**ன்பு உறவுகள் அனைவருக்கும் பணிவான வணக்கங்கள்.

**ஓ.**பி.ஆர் நினைவு நாள் உறுதிமொழி : தமிழக அரசியலில் இன்றும் பலரால் பேசப்படும் சரித்திரங்களைப் படைத்த முதல் முதல்வர், உண்மையான சமூக நீதிக்கு அடிகோலியவர், தேச விடுதலையில் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டவர், ஆன்மீகத்தில் உறுதியான நம்பிக்கை கொண்டிருந்தவர், எளிய முறையில் அரசியல் பாதையை வழிகாட்டி நம் நாட்டிற்கு பெருமை சேர்த்தவர் என அனைத்து மக்களாலும் போற்றிப் புகழப்படக்கூடிய ஒரு தலைவரை நாம் ஒரு குறுகிய வட்டத்திற் குள் சுருக்கிவிடக்கூடாது. அவர் ஒரு அகிலம் போற்றும் தலைவர் என்று எப்போதும் பிரகடனப் படுத்துவோம். ஓ.பி.ராமசாமி ரெட்டியார் அவரது புகழை மக்களுக்கு எந்நாளும் எடுத்துக் கூறிட 25.08.2024 அன்று அவரது நினைவு நாளில் உறுதியேற்போம்.

**கே**ரள மாநிலம் வயநாட்டில் ஜூலை 30, 2024 அன்று ஏற்பட்ட நிலச்சரிவு பேரிடர் நம் தேசத்தை பெரும் சோகத்தில் ஆழ்த்தியது. இதுவரை 400க்கும் மேற்பட்டவர்கள் உயிர் இழந்ததாகவும், 150க்கும் மேற்பட்டோர் காணாமல் போனதாகவும் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. இந்த நிலச்சரிவு கேரளா வரலாற்றில் மிக மோசமான இயற்கை பேரழிவுகளில் ஒன்றாகும். நிலச்சரிவால் ஏற்பட்ட இடிபாடுகளுக்குள் ஏராளமான செல்லப்பிராணிகள் மற்றும் கால்நடைகள் சிக்கி மடிந்தன. ஆடு, மாடுகள், யானை உள்ளிட்ட பல உயிர்கள் நிலச்சரிவில் உயிரிழந்தது பெரும் வேதனையை தருகிறது. பலர் காயமடைந்தும், வீடுகளையும், உடைமைகளையும் இழந்து தவிப்பதை தொலைக்காட்சி, செய்திதாள் மற் றும் சமூக ஊடகங்களில் பார்க்கும்போது இதயமே சுக்குநூறாகும் நிலை உருவானது. நிலச்சரிவால் பாதிக்கப்பட்டுள்ள வயநாடு மக்களுக்கு நம் மக்கள் சார்பிலும், ரெட்டி மலர் வாசகர்கள் சார்பிலும் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறோம். பல குழந்தைகள் பெற்றோரை இழந்து உள்ளனர். பலரும் இந்த அனாதைக் குழந்தைகளை தத்தெடுக்க விருப்பம் தெரிவித்திருப்பது பாராட்டுக்குரியது.

**அ**டுத்து, பட்டியலின (SC), பழங்குடியின (ST) சமூகத்தினரில் மிகவும் நலிவடைந்தவர்களை துணை வகைப்படுத்தி அவர்களுக்கு கல்வி மற்றும் வேலை வாய்ப்பில் உள் இடஒதுக்கீடு வழங்கலாம் என 7 நீதிபதிகளை கொண்ட உச்ச நீதிமன்ற அமர்வு அண்மையில் தீர்ப்பளித்திருக்கிறது. 4 நீதிபதிகள் தீர்ப்புக்கு ஆதரவாக தெரிவித்துள்ள நிலையில், நீதிபதி பி.ஆர்.கவாய், “SC, ST பிரிவில் கிரீமிலேயர் நீக்கம் குறித்த நடைமுறையை அமல்படுத்த புதிய கொள்கையை வரையறுக்க வேண்டும் என்றும், இது தொடர்பாக சட்டம் இயற்றப்பட வேண்டும்” என்கிறார். இரண்டாவது நீதிபதி பங்கஜ் மித்தல், “முதல் தலைமுறையினருக்கு மட்டுமே இடஒதுக்கீடு வழங்கப்படவேண்டும். முதல் தலைமுறை உயர்ந்த நிலையை எட்டிவிட்டால், இரண்டாம் தலைமுறை இடஒதுக்கீடு பலனை பெற அனுமதிக்கக் கூடாது” என்கிறார். மூன்றாவது நீதிபதி விக்ரம்நாத், “தற்போது ஓ.பி.சி பிரிவினருக்கு மட்டுமே கிரீமிலேயர் நீக்கம் நடைமுறை அமலில் இருக்கிறது. இதேபோன்ற நடைமுறையை SC, ST பிரிவினருக்கும் அமல்படுத்த வேண்டும்” என தனது தீர்ப்பில் குறிப்பிடுகிறார்.

**ப**ட்டியலின இடஒதுக்கீட்டில் உள் இடஒதுக்கீடு வழங்குவதற்கு ஆதரவாக உச்ச நீதிமன்றம் வழங்கியிருக்கும் இந்த தீர்ப்பை பல அமைப்புகள் வரவேற்கின்றன. இந்நிலையில் கிரீமிலேயர் நீக்கம் குறித்து தீர்ப்பில் இடம் பெற்றிருக்கும் அம்சத்தை சில அரசியல் தலைவர்கள் எதிர்க்கின்றனர். இந்த இடஒதுக்கீடு சதவீதம் மாநிலத்திற்கு மாநிலம் மாறுபடுகிறது. எனவே நாம் இதை உன்னிப்பாக கவனித்து வரவேண்டும்.

**நி**றைவாக, ஓ.பி.ஆர். நினைவுத் தொண்டு அறக்கட்டளையின் சார்பில் நடத்தப்பட்டு வரும் கே.ஆர்.டி. கேரியர் அகாடமி மூலம் TNPSC குரூப் 1 முதன்மைத் தேர்வு எழுத இருக்கும் மாணவர்களுக்கான இலவச வழிகாட்டுதல் நிகழ்ச்சியை கடந்த 03.08.2024 அன்று பெருநகர சென்னை மாநகராட்சியின் இணை ஆணையர் திருமதி.Dr.J.விஜயராணி IAS அவர்கள் தொடங்கி வைத்தார். இந்த பயிற்சி வகுப்பில் குரூப் 1 முதல்நிலை தேர்வில் வெற்றிப் பெறுவோம் என்கிற நம்பிக்கையுடன் மாணவ, மாணவிகள் பலரும் கலந்துக் கொண்டனர். நம் ரெட்டியார் சமுதாய பிள்ளைகளும் இதனை பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என இதன் மூலம் கேட்டுக் கொள்கிறேன்.

**அ**டுத்த இதழில் சந்திப்போம். நன்றி.

என்றென்றும் சமுதாய உணர்வுடன்,
**Dr.V. செல்வராஜு**

# தமிழ்நாட்டு இரும்புத் தலைவர் ஓ.பி.ராமசாமி ரெட்டியார்



1947 ஆகஸ்டு 15 சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் இந்திய தேசியக் கொடியை முதன் முதலில் ஏற்றி வைத்து ஓ.பி.ஆர் அவர்கள் சுதந்திர தின உரையாற்றினார்.

சமுதாயத்திற்காகத் தன்னையும் தன் உடைமைகளையும் கொடுப்பவனை சிலையாக வடிக்கலாம், வணங்கலாம் என்பர். மக்களுக்காக வாழ்ந்த அத்தகையோர் வாழ்வில் திருப்புமுனையை ஏற்படுத்தி மற்றும் அவர்கள் ஈடுபட்ட பல நிகழ்வுகள் உண்டு.

அப்படிப்பட்ட நிகழ்வுகள் சிலவற்றுக்குக் காரணமாக இருந்த 'கதர்ச் சட்டை ராமசாமி' என்றழைக்கப்பட்டவர் ஓ.பி.ராமசாமி ரெட்டியார். அவருடைய 54வது நினைவு நாளில் நம் எண்ணங்களின் ஓட்டம்.

சென்னைக்கு தெற்கில் சுமார் 125 கி.மீ. தொலைவில் திண்டிவனம் வட்டத்தில் உள்ள ஒரு சிறிய கிராமம் தான் ஓமந்தூர். ஓமந்தூர் கிராமத்தில் நடுத்தர நில உரிமையாளரான முத்துராம ரெட்டியார் ரங்கநாயகி அம்மாள் ஆகியோருக்கு 1885ல் பிறந்தவர்தான் ஓமந்தூர் ராமசாமி. தொடக்கக்கல்வியை கிராமத்து துவக்கப் பள்ளியில் படித்தார்.

பின்னர் திண்டிவனம் வால்டர் ஸ்கட்டர் உயர்நிலைப்பள்ளியில் படித்து வந்தார். இந்த நிலையில் தன்னுடைய தந்தையை இழந்த ராமசாமி அவர்கள் குடும்பத்தை பராமரிக்க வேண்டிய சூழ்நிலையில், பள்ளிப்படிப்பை பாதியிலேயே நிறுத்த வேண்டியதாயிற்று.

ஆனால், இவருடைய சிறிய தந்தையார் தன்னுடைய சகோதரர் காலமானதால், ராமசாமி படிப்பைத் தொடர முடியாது நின்றுவிட்டதை அறிந்து அவரை எப்படியாவது படிக்க வைக்க வேண்டும் என்று எண்ணினார். ராமசாமியை வற்புறுத்தி சென்னையில், திருவல்லிக்கேணி இந்து உயர்நிலைப்பள்ளியில் சேர்த்து படிப்பைத் தொடரச்செய்தார்.

1910ல் திருமணம் நடந்தது. ஒரே ஒரு மகன் சுந்தரம் 1916ல் பிறந்தார். இவருக்கு அடுத்து பிறந்த பெண் குழந்தை பிறந்த சில மாதங்களிலேயே இறந்துவிட்டது. மன உளைச்சலில் இருந்த ராமசாமிக்கு மற்றுமொரு இடி விழுந்தது அவரது வாழ்வில், அவருடைய மனைவி சிங்காரத்தம்மாள் 1920ல் மறைந்தார்.

மனைவி இறந்த நிலையில் தன் மகனை நன்றாக படிக்க வைக்கவேண்டும் என்று எண்ணி சேரன்மாதேவியில் வ.வே.சு.அய்யர் நடத்தி வந்த குருகுலத்தில் சேர்த்துவிட்டார். வ.வே.சு. அய்யர் பொதுவாழ்வில் இருந்தாலும் குருகுல பள்ளிப் பிள்ளைகளை பாகுபாட்டோடு நடத்திவந்தார்.

அந்த குருகுலத்தில் உணவுமுறையில் பேதம் இருந்தது. கட்டுப்பாடு கருதியே குருகுல முறைக் கல்வியை சிலர் ஏற்பதுண்டு. அந்த காலத்தில் பள்ளிகளும் குறைவு. இந்த பள்ளியில் பிராமண பிள்ளைகளுக்கு தனியேயும், மற்ற குழந்தைகளுக்கு தனியாகவும் உணவு வழங்கும் முறை இருந்தது.

இந்த விஷயம் குருகுலத்தில் படித்து வந்த ஐந்து வயதுடைய பள்ளி படிப்பை படிக்கும் சுந்தரத்தின் மனதை பாதித்தது. விடுமுறையில் அழைத்து செல்ல வந்த தந்தை ஓமந்தூர் ராமசாமியிடம் அவன் முறையிட்டான்.

அவர் எண்ணங்கள் எஃகு போன்ற வலிமை வாய்ந்ததுதான். ஆனால் அவரது உள்ளம் மென்மையானது. யாரையும் புண்படுத்தக்கூடாது என்ற எண்ணம் கொண்டவர். இந்த விஷயத்தை பெரியப்பா ஈ.வே.ராமசாமியிடம் சொல்லிவிட்டார். அவருடைய இல்லத்திற்கு பெரியார் வந்தபோது தன் மகனையே அவரிடம் பேசச்செய்தார். அரசாங்கம் தரும் நிதி உதவியில் நடக்கும் குருகுலத்தில் இப்படி நடப்பதைப் பொறுக்கமாட்டாமல் நேரடியாகவே கோரிக்கை வைத்தார். பெரியார் போராடியும் வ.வே.சு.அய்யர் மாறவில்லை. இதனால் தனியாகப் போராடக் கூடாது என்ற நிலையில் எல்லா மக்களையும் இணைத்துக் கொண்டு போராட்டமாக மாற்றினார்.

ஆனால், விடுதலை போராட்ட வீரர் வ.வே.சு.

அய்யர் என்ற போதிலும் தன்னை அவர் மாற்றிக் கொள்ளவில்லை. நியாய உணர்வுக்கு அவர் பணியவில்லை. அந்தப்பள்ளி இழுத்து மூடப்பட்டது!

ஓமந்தூரார், அதன்பிறகு பெங்களூருக்கு அருகில் உள்ள கெங்கேரி என்னும் இடத்தில் பிரம்மச்சாரி ராமச்சந்திரன் என்பவர் நடத்திவந்த பள்ளியில் தன் மகன் சுந்தரத்தை சேர்த்தார்.

ஓமந்தூரார் படித்த படிப்பளவுக்குக் கூட இல்லாமல், இளம் வயதிலேயே பள்ளிப்படிப்பை முடிக்காமலேயே மகன் சுந்தரம் நோய்வாய்ப்பட்டு இறந்து விட்டான். ஓமந்தூரார் அவர்களின் ஊருக்கு தந்தி வந்தது; சென்னையிலிருந்த ஓமந்தூராருக்கு காலதாமதமாகத்தான் இந்த தந்தி கிடைத்தது. இவர் செல்வதற்குள் சுந்தரத்தின் உடலை அடக்கம் செய்துவிட்டார்கள்.

இதற்குப்பின்னர் குடும்ப வாழ்க்கையில் ஈடுபாடு இல்லாமல் முழுநேர அரசியலில் ஈடுபட விரும்பினார். 1927க்கு பின்னர் பல போராட்டங்களில் கலந்து கொண்டார். 1938ல் கட்சித்தலைவர் தேர்தலில் போட்டியிட்டு தீரர் சத்தியமூர்த்தியை 35 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்து தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவரானார். 1942ல் ‘வெள்ளையனே வெளியேறு’ இயக்கத்தில் பங்கு கொண்டார்.

உலகப் போர் முடிவுற்ற நிலையில் நடந்த பொதுத் தேர்தலில் வெற்றி பெற்ற கட்சியின் தலைவராக இராஜாஜியை காங்கிரஸ் மேலிடம் அறிவித்தது. ஆனால் தமிழ்நாடு காங்கிரஸ் உறுப்பினர்கள் கட்சியை விட்டு ஒதுங்கி இருந்த இராஜாஜியை ஏற்க மறுத்து விட்டனர். இறுதியில் கட்சித்தலைவர் தேர்தல் நடந்தது. சி.என்.முத்துரங்க முதலியாரும், ஆந்திராவைச் சேர்ந்த டி.பிரகாசமும் போட்டியிட்டனர்.

இராஜாஜி குழுவினர் நடுநிலை வகித்துக் காலை வாறினர் என்றே கூறலாம். டி.பிரகாசம் வென்று தமிழக முதல்வரானார். இவருக்கு ஆந்திராவிலும் சரி, தமிழகத்திலும் சரி, எதிர்ப்பு வலுத்துக் கொண்டே வந்தது. இந்த நிலையில் இராஜாஜியும், காமராஜரும் கலந்து பேசினார்கள். ஓமந்தூராரை முதல்வராக்க முடிவு செய்தார்கள். ஆனால் ஓ.பி.ராமசாமியை ஒப்புக் கொள்ளச் செய்ய நான்கு மாதங்களானது.

23-3-1947ல் ஓ.பி.ராமசாமி ரெட்டியார் சென்னை மாகாணத்தின் பிரதமராக பதவி ஏற்றுக் கொண்டார். அவருடைய அமைச்சரவையில் 13 பேர் இருந்தனர். பல தடங்கலுக்கு உட்பட்ட தேவதாசி சட்டத்தை 1947ல் அடியோடு ஒழித்தார். தேவதாசி முறை சட்டமீறல் என்றும் அதற்கு உடந்தையாக இருப்பவர்களை குற்றவாளி களாகவும் சேர்த்தனர்.

இவருடைய ஆட்சிக் காலத்தில்தான் திருப்பதி கோயிலுக்கு முதல்முதலாக ஆதிதிராவிடரை திருப்பதி தேவஸ்தான போர்டில் உறுப்பினராக திண்டிவனம் சட்டமன்ற உறுப்பினரான குல சேகர தாஸ் என்பவரை நியமித்தார்.

1922ல் பனகல் அரசர் சென்னை மாகாணத்தின் பிரதம அமைச்சராக இருந்தபோது பார்ப்பனர் அல்லாதவர்களுக்கு 50 சதவீத இட ஒதுக்கீடு கிடைக்குமாறு செய்யப்பட்டது. 1937ல் ஆட்சிக்கு வந்த இராஜாஜி இந்தச் சட்டத்தை ஒழித்து விட்டார்.

1947ல் ஆட்சிக்கு வந்த ஓமந்தூரார் கல்லூரி மாணவர் சேர்ப்புக் குழுவை மீண்டும் ஏற்படுத்தி 100 சதவீத இடங்களில் எவரெவர்க்கு எவ்வளவு இடங்கள் செல்கிறது என்பதைக் கண்காணிக்க உத்தரவிட்டார். பி.வி.ராஜமன்னாரை தலைமை நீதிபதியாக நியமித்தது ஓமந்தூரார் அவர்கள்தான். சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாக இருந்த போது 1950ல் இந்த இடஒதுக்கீடு உத்தரவு செல்லாது என்று ராஜமன்னார் அறிவித்தார். இந்த அரசாணை (கம்யூனல் ஜி.ஓ.) புதிய அரசியல் அமைப்புச் சட்டம் வந்தவுடன் 1951ல் உச்ச நீதிமன்றமும் செல்லாது என அறிவித்தது.

இருந்தாலும், பெரியாரின் இடைவிடாத போராட்டத்தின் விளைவாகவே இந்த சட்டம் மீண்டும் நிறைவேறியது. இதற்காக அரசியல் அமைப்புச் சட்டத்தில் முதன்முறையாக திருத்தம் கொண்டு வந்து நாடாளுமன்றத்தில் நிறைவேற் றப்பட்டது.

ஒருமுறை அரசில் பணிபுரியும் பெரிய அதி–காரிகள் சிலர் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியாரைப் பற்றி ‘ஹிந்து’ நாளிதழில் குறைகாணும் பல கடிதங்களை எழுதினார்கள். இந்த செய்தியை அறிந்த இந்தியப் பிரதமர் நேரு அவர்கள் அதைபற் றி ஓமந்தூராரிடம் நேரிடையாகவே விளக்கம் கேட்டாராம்.

அதற்கு ஓமந்தூரார், மற்றவர்கள் கூறும் குற்றச் சாட்டுக்களை நீங்களும் கூறுகிறீர்கள். இந்தக் கூற்றை நான் ஆட்சேபிக்கிறேன். தேவைப்பட்டால் பதவியை ராஜினாமா செய்யவும் நான் தயாராக இருக்கிறேன் என்று பட்டேலைப் போலவே அஞ்சாமல் பட்டென்று பதில் உரைத்தார்.

மற்றுமொரு முறை சென்னை உயர் நீதிமன்ற நீதிபதியாக சிதம்பரத்தைச் சேர்ந்த நாகபூஷணம் என்ற திறமைவாய்ந்த தகுதியுடையவரை நியமிக்க வழி செய்தார். ஆனால் மத்திய அரசில் இருந்தவர்களும், இராஜாஜியும் வி.கே.திருவேங்கடாச்சாரி என்பவரை அந்த பதவிக்கு நியமிக்க விரும்பினார்கள்.

இதை அறிந்த நேரு மீண்டும் இதைப் பற்றியும் விசாரித்தார். பரிந்துரை முதல்வரின் உரிமை. இதை மறுப்பதில் நான் உறுதியாக இருப்பேன். இல்லையென்றால் நான் ராஜினாமா செய்யக் கூடத் தயாராக இருக்கிறேன்” என்று ஓமந்தூரார் நேருவை அதிரவைத்தார். அப்போது பட்டேலும் அங்கே இருந்தார். உள்துறை அமைச்சராக இருந்த பட்டேல் ஓமந்தூரார் கருத்துக்கே மதிப்பளித்தார். அவரது வாதங்களை ஒப்புக் கொண்டார்.

இவரது 100 சதவீதம் நியாயமாக நடந்து கொள்ளும் போக்கு அரசியல்வாதிகளுக்கு

சரிப்படவில்லை. காங்கிரஸ் கட்சிக்குள்ளேயே அவரைக் குறை சொல்லத் தொடங்கினார்கள். இதனால் 1949ம் ஆண்டு ஏப்ரல் மாதம் பதவியிலிருந்து விலகிக் கொண்டார்.

கட்சி அரசியலை விட்டதும் ஓமந்தூருக்கு சென்று விட்டார் ஓ.பி.ஆர். ஆனால் அவருக்கு அங்கும் அமைதி கிடைக்கவில்லை. நேர்மையற்ற நிர்ப்பந்த உலக செயல்பாட்டில் அவரால் ஈடுகொடுக்க முடியவில்லை. இதனால் வடலூர் சென்று ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டிருந்த பணிகளை நேரடியாக பார்க்கத் தொடங்கினார். தனக்கு கிடைத்த குடும்பச் சொத்துக்களை விற்றுவிட்டு நிரந்தரமாகவே வடலூர் வந்து சேர்ந்தார். 1951ம் வருடம் சன்மார்க்கச் சங்கத்தை துவக்கி அங்கேயே தங்கினார். தான் வாங்கிய சுமார் 250 ஏக்கர் நிலத்துடன், அரசிடம் பெற்ற 250 ஏக்கர் நிலத்தையும் சேர்த்து அதில் ஆழ்துளைக் கிணறுகளைத் தோண்டினார்.

தோப்புகள், பயிர்நிலங்கள், தோட்டங்கள் போன்றவற்றை உருவாக்கினார். 1955ம் ஆண்டு அவரது மணிவிழாவுக்கு ரெட்டியார் சமூகத்தினர் கொடுத்த ரூ.60 ஆயிரத்தை அறக்கட்டளைக்கு பயன்படுத்தினார். தற்போதைய வடலூர் வளர்ச்சிக்கு ஆரம்பகாலத்திலும், தற்போதும் தொழிலதிபர் பொள்ளாச்சி மகாலிங்கம் தான் காரணம்.

மக்களோடு மக்களாக ஓமந்தூரார் வாழ்ந்தார், அதே சன்மார்க் நிலையத்திலேயே சாதாரண பாயிலேயே படுத்துக்கிடப்பார். 1969ல் இந்த நிறுவனப் பொறுப்புகளை யாரிடம் ஒப்படைப்பது என்றிருந்த ஓமந்தூராருக்கு கிடைத்தவர் மேற்காணும் பொள்ளாச்சி மகாலிங்கம்.

அப்பர் சான்றோர் இல்லம், சுத்த சன்மார்க்க நிலையம், வள்ளலார் குருகுலம் உயர்நிலைப் பள்ளி, அப்பர் அநாதை ஏழை மாணவர் இல்லம், இராமலிங்கர் தொண்டர் இல்லம் போன்ற நிறுவனங்கள் அவருடைய மனம் போல் இன்றளவும் பொள்ளாச்சி மகாலிங்கம் அவரது தொண்டால் மகா நகரமாகவே உருவாகி பெருகி வருகிறது. தமிழ்நாட்டில் ஒரு நிரந்தரமான சுற்றுலாத் தலமாகவே மாறிவிட்டது.

1970ம் ஆண்டு ஜுன் மாதம் உடல்நலம் குன்றி சென்னைக்கு வந்தார். அப்போது முதலமைச்சராக இருந்த கலைஞர் அவர்கள் ஓமந்தூராரை அரசின் செலவிலேயே மருத்துவம் பார்த்துக்கொள்ளச் சொல்லியனுப்பினார், அவர் ஒப்புக் கொள்ளவில்லை. 25-8-1970 அன்று பகல் 12 மணிக்கு இயற்கை எய்தினார். அவருடைய தன்னலமற்ற சேவைக்காகவே முன்னாள் தமிழக முதல்வர் மு.கருணாநிதி அவர்கள் அரசினர் தோட்டத்திற்கு, ‘ஓமந்தூரார் அரசினர் தோட்டம்’ என்று பெயரிட்டார். தன்னலமற்ற அவருடைய புகழ் அனைவரது நெஞ்சங்களிலும் நின்று நிலைத்து என்றும் மணம் பரப்பும்.

**எந்த ஒரு செயலையும் ஆர்வம் குறையாமல் நம்பிக்கையுடன் செய்தால் வெற்றி நம்மை தேடி வரும்**

## ரெட்டி மலர் சந்தா படிவம்

| சந்தாவிற்கான கால அளவு | சந்தா தொகை | (✓) டிக் செய்யவும் |
|---|---|---|
| 1 ஆண்டு | 180/- | |
| 3 ஆண்டு | 500/- | |
| 15 வருட சந்தா | 2500/- | |

**பெயர் :** ..................................................................

**முகவரி :** ..................................................................

..................................................................

**தொலைபேசி :** ..................................................................

நான் இத்துடன் ............. வருட சந்தா/15 வருட சந்தா தொகை ரூ............. டி.டி / மணியார்டர் / காசோலை மூலம் Reddy Elainger Peravai (ரெட்டி இளைஞர் பேரவை) என்ற பெயரில் எடுத்து இணைத்துள்ளேன்.

நாள் : ______________ சந்தாதாரரின் கையொப்பம் : ______________________________

**சந்தா தொகையை அனுப்ப வேண்டிய முகவரி**

**ரெட்டி மலர்**

எண். 34A, கங்கையம்மன் கோவில் தெரு, ஜாபர்கான்பேட்டை,
சென்னை – 600 083. 044 - 2485 3333, 9688877700.
E-mail Id : reddymalar06@gmail.com,
Website : www.reddymalar.com,
Twitter : @malar_reddy.twitter.com
Online Website : www.reddymalar.com

ACCOUNT PAYEE :
**REDDY ELAINGER PERAVAI**
BANK NAME : **INDIAN BANK**
BRANCH : **JAFFERKHANPET,**
A/C. NO. : **7105534900**
IFSC CODE : **IDIB000J019**

# TNPSC குரூப் I தேர்வுக்கான வழிகாட்டுதல் நிகழ்ச்சியினை Dr.J.விஜயராணி IAS தொடங்கிவைத்தார்




கடந்த 03.08.2024 அன்று ஓபிஆர் நினைவுத் தொண்டு அறக்கட்டளையின் சார்பில் நடத்தப்பட்டு வரும் **“கே.ஆர்.டி கேரியர் அகாடமி”**யில் TNPSC குரூப் 1 முதன்மை தேர்வு எழுத இருக்கும் மாணவ, மாணவிகளுக்கான இலவசப் பயிற்சிக்கான வழிகாட்டுதல் நிகழ்ச்சியினை (Orientation Program) பெருநகர சென்னை மாநகராட்சியின் இணை ஆணையர் **திருமதி.Dr.J.விஜயராணி IAS** அவர்கள் தொடங்கி வைத்தார். அதுசமயம் TNPSC குரூப் 1 தேர்வுக்கு தயாராவது எப்படி? தேர்வுக்கு எத்தனை வருட வினாத்தாள்களை படித்தால் நல்லது? எந்த மாதிரியான புத்தகங்கள் படிக்க வேண்டும்? TNPSC குரூப் 1 தேர்வை தமிழில் எழுதலாமா? என்பது போன்ற கேள்விகளுக்கு பதிலளித்து நிகழ்ச்சியை சிறப்பாக நடத்தினார்.

நிகழ்ச்சியில் ஓ.பி.ஆர் நினைவுத் தொண்டு அறக்கட்டளையின் நிறுவனரும், கே.ஆர்.டி கேரியர் அகாடமியின் இயக்குநருமான Dr.V.செல்வராஜு அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். கே.ஆர்.டி கேரியர் அகாடமியின் பயிற்றுனரும், ஓய்வுப் பெற்ற தலைமை ஆசிரியருமான திரு.R.இராஜசேகரன் அவர்கள் தலைமை தாங்கினார். ரெட்டி இளைஞர் பேரவையின் தலைவரும், அறங்காவலருமான திரு.D.மணிவாசகன் அவர்கள் முன்னிலை வகித்தார். அறங்காவலர்கள் திரு.V.ஜெயக்குமார், திரு.P.ஜெயக்குமார், திரு.M.ஜெயபிரகாஷ், திரு.R.நந்தகுமார், திரு.N.செல்வராஜ், திரு.N.சுந்தரராஜன், பயிற்றுனர்கள் திரு.V.M.செந்தில்குமார், திரு.ஜாகிர்உசேன், திரு.லோகேஷ் மற்றும் பயிற்சி மாணவ, மாணவிகள் உள்ளிட்ட பலரும் கலந்துக் கொண்டு சிறப்பித்தனர். நிகழ்ச்சியை மாணவி செல்வி.K.கவிதா அவர்கள் தொகுத்து வழங்கினார்.




நிகழ்ச்சியில் அறக்கட்டளையின் நிறுவனரும், அகாடமியின் இயக்குநருமான Dr.V.செல்வராஜு அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தி பேசும் போது, “பொருளாதார மற்றும் சமூக ரீதியாக பின்தங்கிய நிலையில் இருக்கும் கிராமப்புற ஏழை, மாணவ, மாணவிகளுக்கு மத்திய, மாநில அரசு நடத்தும் போட்டித் தேர்வுகளுக்கு சாதி, மதம், மொழி மற்றும் பிற வேறுபாடுகளைப் பொருட்படுத்தாமல் அனைத்து மாணவர்களுக்கும் இலவசமாக பயிற்சியை வழங்குவதற்காக கே.ஆர்.டி கேரியர் அகாடமி கடந்த மூன்று ஆண்டுகளாக தொடர்ந்து சிறந்த பயிற்சியை வழங்கி வருகிறது.

இங்கு பயிற்சிப் பெற்ற 50க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் மத்திய, மாநில அரசுப் பணிகளில் அமர்ந்துள்ளனர் என்பதை பெருமையுடன் இங்கு தெரிவித்துக் கொள்கிறேன். இந்த வெற்றிக்கு காரணமான பல உயர் அதிகாரிகள் இங்கு வருகைத் தந்து எங்களையும், மாணவர்களையும் ஊக்கமளித்து வருகிறார்கள். அந்த வகையில் இன்றைய நிகழ்ச்சியை தொடங்கி வைத்து ஊக்கவுரை நிகழ்த்த இருக்கின்ற பெருநகர சென்னை மாநகராட்சியின் இணை ஆணையர் திருமதி.Dr.J.விஜயராணி IAS அவர்களையும், இதனை சிறப்பாக நடத்த ஒத்துழைப்பு வழங்கி வரும் அறங்காவலர்கள், நன்கொடையாளர்கள் அனைவரையும், பயிற்றுனர்களையும்,



போட்டித்தேர்வு எழுத இருக்கும் மாணவ, மாணவிகளையும் வருக வருக என்று வரவேற்றார்.

பெருநகர சென்னை மாநகராட்சியின் இணை ஆணையர் **திருமதி.Dr.J.விஜயராணி** IAS அவர்கள் துவக்க உரையின் போது, "ஓபிஆர் நினைவுத் தொண்டு அறக்கட்டளை நடத்தும் கே.ஆர்.டி கேரியர் அகாடமியின் இயக்குநரையும், அறக்கட்டளையின் நிர்வாகிகளையும், மாணவ, மாணவிகளையும் இதே ஆண்டில் மீண்டும் சந்திப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். மத்திய, மாநில போட்டித் தேர்வுகளுக்கு இந்த பயிற்சி மையம் இலவசமாக நடத்தப்படுவது பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்துகிறது. நிர்வாகிகளுக்கு பாராட்டுகள், வாழ்த்துகள். சுறுசுறுப்பாகவும், விறுவிறுப்பாகவும் பணியாற்றி வரும் பயிற்றுனர்களையும் வாழ்த்துகிறேன்.

கடுமையான உழைப்பும், காலம் தவறாமையும், கனிவும் தான் என்னை கடுமையாக உழைக்கவும், உழைத்த அனுபவத்தை உங்களிடம் எடுத்துச் சொல்லவும் என்னை அழைத்திருப்பதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். தற்போது போட்டித் தேர்வுகளை எழுத இருக்கும் ஆர்வலர்களிடையே இந்த மையம் பெரும் வரவேற்பை பெற்று வருவது மகிழ்ச்சியளிக்கிறது. பல கிராமப்புற ஏழை மாணவ, மாணவிகள் இங்கு பயிற்சியை எடுத்துக் கொண்டு பணியில் சேர்ந்திருப்பதும், சேர இருப்பதும் நல்ல முன்னேற்றத்திற்கும், வளர்ச்சிக்குமான அறிகுறியாகும். தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் நடத்த இருக்கும் குரூப் 1 முதன்மை தேர்வு எழுத இருக்கும் உங்களுக்கு இங்கு சிறந்த நூலக வசதி, வகுப்பறை, நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய ஸ்மார்ட் போர்டு வசதி, சிறந்த பயிற்றுனர்கள், தொடர் சோதனை தேர்வுகள், சிறப்பு கவனம் எனப் பல வழிகளிலும் உங்களுக்கு சிறந்த பயிற்சி கிடைப்பதை எண்ணி பெருமைப்படுகிறேன். நாங்கள் படித்தக் காலத்தில் இது போன்ற வசதிகள் இல்லை. சொல்லப் போனால் நுழைவுத் தேர்வு அடிப்படையில் ஒரே ஒரு பயிற்சி மையம் மட்டும் சென்னையில் அப்போது தமிழக அரசு சார்பில் நடத்தப்பட்டது. அதில் எனக்கு இடம் கிடைக்க வில்லை. அதனால் பல அவமானங்களை சகித்துக்கொண்டு தேர்வில் வெற்றிப் பெறுவது ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு தீவீரமாக செயல்பட்டு தேர்வை சந்தித்தேன். அதனால்தான் இன்று உங்களோடு ஒரு அதிகாரியாக பேசும் வாய்ப்பையும் பெற்றிருக்கிறேன். போட்டித் தேர்வுக்கு புதிதாக தயாராக வரும் எல்லோருக்கும் இருக்கும் ஒரு குழப்பம் என்னவென்றால் எங்கே தொடங்கி எதைப்படிப்பது, எப்படிப்படிப்பது என்பது தான். தேர்வு என்று வந்து விட்டால் பலதரப்பட்ட பாடங்களில் இருந்து கேள்விகள் கேட்கப்படும். அப்போது எந்தப் பாடத்தை முதலில் படிக்க வேண்டும், எதை இறுதியாக படிக்க வேண்டும் என்கிற குழப்பம் உண்டாகும். அதற்கான வழிக்காட்டுதலைத்தான் நான் இன்று உங்களுக்கு சொல்லப் போகிறேன்.



போட்டித் தேர்வுக்கு தயாராகும் தேர்வர்களான நீங்கள் மூன்று முக்கிய விஷயங்களை கவனத்தில் கொள்ள வேண்டும். ஒன்று நேரம், இரண்டாவது பாடக்குறிப்புகள், மூன்றாவது நடக்க உள்ள தேர்வில் பழைய வினாத்தாள்களை பகுப்பாய்வு செய்து ஒவ்வொரு பிரிவில் இருந்தும் சராசரியாக எத்தனை வினாக்கள் கேட்கப் படுகின்றன என்கிற தெளிவு என இந்த மூன்றையும் அறிந்திருப்பது அவசியம்.

முதலாவதாக, நேரத்தை செலவழிப்பதில் கஞ்சனைப் போல் இருக்கவேண்டும். தேர்வுக்கு தயாராவது எனத் தீர்மானித்த அந்த வினாடியிலிருந்து தேர்வு நாள் வரை எத்தனை மாதங்கள், எத்தனை நாட்கள், எத்தனை மணி நேரங்கள் நம் கையில் இருக்கிறது என்பதை கணக்கிட்டு ஒரு தெளிவான முடிவுக்கு வரவேண்டும். ஏனென்றால் நம்மால் நேரத்தை கூட்டவோ, குறைக்கவோ முடியாது. ஆனால் நமது பிற வேலைகளை மாற்றி அமைத்துக் கொள்ளவோ குறைக்கவோ உங்களால் முடியும். எனவே நேரம் என்பது மிக முக்கியம். அதனை சரியாக திட்டமிடுங்கள்.

இரண்டாவதாக, முதலில் நீங்கள் எந்தத் தேர்வு எழுதுகிறீர்களோ அந்தப் பாடத்திட்டத்தை முழுமையாக படியுங்கள். எந்தப் பாடங்களில் இருந்து எவ்வளவு கேள்விகள் கேட்கப்படும் என்பதை புரிந்து கொள்ளுங்கள். அப்போது எதை ஆழமாக படிக்கவேண்டும், எதை மேலோட்டமாக படிக்கவேண்டும் என்பது உங்களுக்கு தெரிந்து விடும். பாடக்குறிப்புகள் விஷயத்தில் தமிழ்நாடு பள்ளிப்பாடத் திட்டத்தின் பாடங்களை மட்டும் படித்தால் போதுமா? அல்லது UPSC தேர்வுக்கு NCERT பாடத்திட்டங்களை படித்தால் மட்டும் போதுமா? அல்லது இரண்டையும் சேர்த்துப் படிக்க வேண்டுமா? எவ்வளவு படிப்பது? எந்த மெட்டீரியர் படிப்பது என பலர் என்னிடம் பல இடங்களிலும்

கேள்விக் கேட்பார்கள். எல்லாத் தேர்வுகளுக்கும் நான் சொல்ல விரும்புவது அதிகாரப்பூர்வமாக தரப்பட்ட பாடத்திட்டத்தில் (Syllabus) என்னக் கூறப்பட்டிருக்கிறதோ அவையெல்லாம் நிச்சயம் படிக்க வேண்டும். சொல்லப் போனால் மனனம் செய்து கொள்ள வேண்டும். அதனை முறையாக நடைமுறைப்படுத்திக் கொள்ள வேண்டும்.

மூன்றாவதாக, பழைய தேர்வு வினாத்தாள் பகுப்பாய்வு மிக அவசியம். ஒவ்வோர் ஆண்டும் UPSC தேர்வுப் போலவே தமிழ்நாடு அரசு பணி–யாளர் தேர்வாணையமும் கால அட்டவணையை வெளியிடுகிறது. அதனை முன்னதாகவே அறிந்து எந்தெந்த தேர்வுகளில், எந்த மாதிரியான வினாக்களை எந்தெந்த பகுதிகளில் இருந்து கேட்கிறார்கள் என பகுப்பாய்வு மேற் கொள்ளவேண்டும். இவ்வாறு திட்டமிட்டு செயல்பட்டு விடாமுயற்சியுடன் பயிற்சி எடுத்துக் கொண்டு கடினமாக உழைத்தால் நிச்சயம் இங்கு உள்ள அனைவருமே வெற்றிப் பெறலாம். நல்ல காலம், நல்ல நேரம் என்பதெல்லாம் புதிதாகப் பிறப்பதில்லை. நமக்கு இருக்கும் நேரத்தை திட்டமிட்டு செலவழித்தால் வெற்றி நிச்சயம்" என்றார்.

நிறைவாக சிறப்பு விருந்தினராக கலந்துக் கொண்ட திருமதி.Dr.J.விஜயராணி IAS அவர்கள்



மாணவ, மாணவிகளின் பல்வேறு கேள்வி களுக்கும், சந்தேகங்களுக்கும் பதிலளித்து அவர்களுக்கு விளக்கமும், ஊக்கமும் தந்தார்.

முன்னதாக, ஓய்வுப் பெற்ற தலைமை ஆசிரியரும், கே.ஆர்.டி.கேரியர் அகாடமியின் பயிற்றுனருமான திரு.R.இராஜசேகரன் அவர்கள் தலைமை தாங்கி பேசும் போது, "அரசுப் பணி என்பது சமூகத்தில் நமக்கெல்லாம் ஒரு அங்கீகாரத்தையும், அந்தஸ்தையும் தரும் பணி–யாகும். இங்கே கே.ஆர்.டி. கேரியர் அகாடமியில் சேர்ந்துள்ள அனைவரும் சாதிக்க வேண்டும் என்ற ஆர்வமுடன் சேர்ந்து உள்ளீர்கள். ஆனால் எண்ணத்தை செயல்படுத்தும் போது பணியை தள்ளிப் போடுதல் பலரிடம் காணப்படுகிறது. ஏதாவது ஒரு சிறு இடையூறு இருந்தாலும் அதனை காரணம் காட்டி அப்புறம் படிக்கலாம் என சாக்குப்போக்கு சொல்லி தள்ளிப் போடுதலைத் தவிர்க்க வேண்டும். எத்தனை இடையூறுகள் வந்தபோதிலும் தீட்டிய அட்டவணைப்படி படிப்பேன் என்பதுதான் வெற்றியின் அடையாளம். நேர மேலாண்மை மிக இன்றியமையாதது. ஒவ்வொரு நாளும் எத்தனை மணி நேரம் படித்தோம் என்பதல்ல, எத்தனை நேரம் சிரத்தையுடன் தரமாக படித்தோம் என்பதுதான் முக்கியம். வெவ்வேறு பாடப்பகுதிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் மதிப்பெண்கள் அடிப்படையில் வெயிட்டேஜ் கொடுத்து அதற்கு ஏற்ப நேரம் செலவிட்டு படிக்க வேண்டும். படிக்கும்போது கருத்துக்களில் சில, பிற பாடப்பகுதிகளுடன் தொடர்புடையதாக இருந்தாலும், சிறிதளவு புரிதல் இல்லை என்றாலும், அப்போதே சுனக்கமின்றி ஒப்பிட்டுப் பார்த்தலிலும் பொருள் புரிந்து கொள்வதிலும் கவனம் செலுத்த வேண்டும். நீடித்த நினைவிற்கு இது பெரிதும் உதவும். (Revision) திருப்புதலிலும் கவனம் செலுத்த வேண்டும்.




லாஜிக்கல் கருத்துகளை நன்றாக புரிந்து கொண்டால் திருப்புதல் சில தடவைகள் போதும். இலக்கணம், புள்ளிவிவரம் போன்ற பிற கருத்துகளுக்கு கூடுதலாக திருப்புதல் செய்ய வேண்டும். முயற்சிகள் ஒரு சில வருடங்கள் கடந்தாலும் மன அழுத்தத்திற்கு இடம் தராமல் முயற்சியை தொடர வேண்டும். முயற்சி எண்ணிக்கை கூடும் போது வெற்றிக்கனி அருகில் உள்ளது என்று பொருள். முயற்சி திருவினை யாக்கும். வாழ்த்துகள்" என்றார்.

ஓ.பி.ஆர் நினைவுத் தொண்டு அறக்கட்டளை அறங்காவலர் திரு.M.ஜெயபிரகாஷ் அவர்கள் பேசும்போது, "நம் கண் முன்னே பல வெற்றியாளர் களை அழைத்து வந்து நமக்கெல்லாம் வழிகாட்டியாக இருக்கின்ற அறக்கட்டளையின் நிறுவனரும், இயக்குனருமான Dr.V.செல்வராஜு அவர்களுக்கு நன்றி. திறமை, உழைப்பு, விடாமுயற்சி என வெற்றிக்கு தேவையான அனைத்து சிறந்த நல்ல குணங்களையும் தாங்கி இங்கு வருகைத் தந்து நமக்கு சிறப்புரை ஆற்றிய பெருநகர சென்னை மாநகராட்சியின் இணை ஆணையர் திருமதி.Dr.J.விஜயராணி IAS அவர்களுக்கு அறக்கட்டளை சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். கிடைக்கும் வாய்ப்புகளை நாம் எதிர்கொண்டு அதனை பயன்படுத்தும் விதமே நம்மை சாமானியர்களிட மிருந்து பிரித்து சாதனையாளர்களாக மாற்றுகிறது என்கிற சூட்சமத்தை எடுத்துச் சொல்லுகின்ற பயிற்றுனர்களுக்கும் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம். தோல்வி என்பது நாம் அனைவரும் சந்திக்கும் ஒன்றுதான். அந்த தோல்வி கற்றுத்தரும் ஒவ்வொரு பாடத்தையும் சரிவர ஆராய்ந்து அதி–லிருந்து வெற்றிக்கான வழிமுறைகளை அறிந்தவன் நானாக இருக்கப் போகிறேன் என்ற தன்னம்பிக்கையோடு வருகைத் தந்து நிகழ்ச்சியில் கலந்து கொண்ட மாணவ, மாணவிகளுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்" என்றார்.

# திரு.R.ரமேஷ்குமார் சார்பு செயலாளராக பதவி உயர்வு



சென்னை தலைமைச் செயலகத்தில் நீர்வளத் துறை அமைச்சகத்தில் பிரிவு அலுவலராக பணி–யாற்றிய திரு.R.ரமேஷ்குமார் அவர்கள் தற்போது தலைமைச் செயலகத்தில் விவசாயத் துறையில் அரசு சார்பு செயலாளராக பதவி உயர்வுப் பெற்றுள்ளார். பதவி உயர்வு என்பது ஒரு நபரின் வாழ்க்கை பாதையில் ஓர் உண்மையான முன்னேற்றம். இவர் நீண்ட காலமாக நேர்மையாகவும், கடினமாகவும் அர்ப்பணிப்புடனும் உழைத்து வருபவர். இவரது தகுதியான பதவி உயர்வுக்கு ரெட்டி மலர் சார்பில் மனமார்ந்த வாழ்த்துகள்.

திரு.R.ரமேஷ்குமார் நாகப்பட்டினம் மாவட்டம் மயிலாடுதுறையில் மறைந்த தெய்வத்திரு. R.ராமதாஸ் ரெட்டியார்–திருமதி.R.விஜயலட்சுமி தம்பதியரின் மகனாக ஜனவரி 10, 1972 அன்று பிறந்தவர்.

ஆரம்பக்கல்வியை மயிலாடுதுறையிலும், கல்லூரிப் படிப்பை மாயவரம் AVC தன்னாட்சி கல்லூரியிலும் பயின்றவர். வேதியியல் துறையில் எம்.எஸ்.சி முதுகலைப்பட்டம் பெற்ற இவர் தொடக்கத்தில் SPIC கம்பெனியில் 6 வருடம் தரக் கட்டுப்பாட்டு வேதியியலாளராக பணியாற்றினார். அப்போது தொழிலாளர்களின் நலனுக்காகவும், அவர்களது வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்காகவும் தொழிற்சங்கத் தலைவராக இரண்டு ஆண்டுகள் பொறுப்பு வகித்து தொழிலாளர்களின் இதயங்களில் இடம்பிடித்தார். பின்னர் அரசுப் பணியில் சேரவேண்டும் என்ற ஆர்வத்தின் காரணமாக தொடர்ந்து TNPSC நடத்திய குரூப் 5 Special Services பணிகளுக்கான போட்டித் தேர்வை எழுதி நேர்முக எழுத்தராக 1997ல் தலைமைச் செயலகத்தில் பொதுப் பணித் துறையில் சேர்ந்தார். இது இவரது வாழ்க்கையில் திருப்புமுனையை ஏற்படுத்தியது.

2003ல் முதுநிலை நேர்முக எழுத்தராகவும், 2005ல் நேர்முக உதவியாளராகவும், பின்னர் உதவிப்பிரிவு அலுவலராகவும், 2010ல் பிரிவு அலுவலராகவும் (Section Officer), 2024ல் தலைமைச் செயலகத்தில் விவசாயத் துறையில் அரசு சார்பு செயலாளராக பதவி உயர்வுப் பெற்று பணிபுரிகிறார்.

### இல்லற வாழ்க்கை

தூத்துக்குடி மாவட்டம், எட்டயபுரம் தாலுகா ராஜாபட்டியைச்சேர்ந்த திரு.சேதுராமலிங்கம் ரெட்டியார்–திருமதி.முத்துவல்லி தம்பதியரின் மகள் R.லலிதா அவர்களை ஆகஸ்ட் 29, 2003 அன்று திருமணம் செய்து கொண்டார். இத்தம்பதியினர் 2010ல் ரேணுகா என்கிற தவபுதல்வியை ஈன்றெடுத்து அவருக்கு சிறந்த கல்வியை வழங்கி வருகின்றனர். திரு.R.ரமேஷ்குமார் தனது மனைவி R.லலிதாவை TNPSC குரூப் 2 தேர்வு எழுத ஊக்கப்படுத்தி நல் ஆதரவினை வழங்கினார். திருமதி.லலிதா அவர்களும் சிறப்பாக தேர்வு எழுதி 2010ல் தமிழக அரசின் கருவூலத் துறையில் கணக்காளராக (Accountant) சென்னையில் பணியில் அமர்ந்தார். தொடர்ந்து சிறப்பாக பணியாற்றி 2015 முதல் அவர் உதவி கணக்கு அலுவலராக (Assistant Account Officer) பணியாற்றி வருகிறார்.

பதவி உயர்வுப்பெற்றுள்ள திரு.R.ரமேஷ்குமார் அவர்கள் நம் சமூகத்தின் மீது மிகுந்த பாசமும், அக்கறையும் கொண்டிருந்ததால் ரெட்டி இளைஞர் பேரவைக்கும், ஓ.பி.ஆர் நினைவுத் தொண்டு அறக்கட்டளை நடத்தும் கே.ஆர்.டி. கேரியர் அகாடமிக்கும் பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார்.

அவர் மேலும் பல பதவி உயர்வுகளை பெற்று வாழ வாழ்த்துகிறோம். அவரும், அவரது குடும்பத்தாரும் சிறப்புடன் வாழ ரெட்டி இளைஞர் பேரவை, ஓ.பி.ஆர் நினைவுத் தொண்டு அறக்கட்டளை, கே.ஆர்.டி. கேரியர் அகாடமி மற்றும் ரெட்டி மலர் சார்பாக மனதார வாழ்த்துகிறோம்.

திரு.R.ரமேஷ்குமார் அவர்கள் 2001 முதல் 2003 வரை வருவாய், பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சரிடம் இளநிலை தனி உதவியாளராக (Junior PA) பணியாற்றினார். அமைச்சர் மாற்றத்தைத் தொடர்ந்து தமிழக பொதுப்பணித் துறையில் தனது பணியை தொடர்ந்தார்.

இவரது அனுபவம், திறமையை ஆய்வு செய்து தமிழக அரசின் நிர்வாகத் துறை மீண்டும் 2011 முதல் 2013 வரை மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரிடம் முதுநிலை நேர்முக உதவியாளராக பணியாற்றினார்.

# ஓ.பி.ஆர் அறக்கட்டளை சார்பில் 78வது சுதந்திர தினவிழா




ஓ.பி.ஆர் நினைவுத் தொண்டு அறக்கட்டளை சார்பில் 78வது சுதந்திர தின விழா ஆகஸ்ட் 15, 2024 அன்று கோலாகலமாக கே.ஆர்.டி கட்டட வளாகத்தில் கொண்டாடப்பட்டது. கே.ஆர்.டி. கேரியர் அகாடமியில் பயிலும் மாணவ, மாணவிகள் பெருந்திரளாக நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

அதுசமயம் தமிழக ஆளுநர் அலுவலகத்தில் சார்புச் செயலாளராக பணியாற்றி ஓய்வுப் பெற்ற திருமதி.ரமாபிரபா சேஷாத்ரி அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு தேசிய கொடியை ஏற்றி வைத்து விழா பேருரை நிகழ்த்தினார். நிகழ்ச்சிக்கு ஓ.பி.ஆர் நினைவுத் தொண்டு அறக்கட்டளை நிறுவனரும், கே.ஆர்.டி. கேரியர் அகாடமி இயக்குநருமான Dr.V.செல்வராஜு அவர்கள் வரவேற்றார். அது சமயம் அறங்காவலர்கள் திரு.R.நந்தகுமார், திரு.R.ரமேஷ்குமார், திரு.R.புகழேந்திரன், திரு.R.காமராஜ், திருமதி.தேவிமோகன், அகாடமியின் பயிற்றுனர் திரு.R.இராஜசேகரன், ரெட்டி இளைஞர் பேரவையின் துணைத் தலைவர் திரு.சுரேந்திரகுமார், நிர்வாகி திரு.ராஜேஷ், திருமதி.சசிகலா செல்வராஜு, திருமதி.அனிதா அருண்குமார், அக்ஷயா புட்ஸ் திரு.ரவி, அகாடமியின் பயிற்றுனர்கள் மற்றும் மாணவ, மாணவிகள் பெருந்திரளாக கலந்துக் கொண்டனர்.

காலை சரியாக 9.00 மணிக்கு திருமதி.ரமாபிரபா சேஷாத்ரி அவர்கள் கொடியேற்றினார். அதனைத் தொடர்ந்து அனைவருக்கும் இனிப்பு வழங்கப்பட்டது. தொடர்ந்து 78வது சுதந்திர தினவிழா சிறப்பு நிகழ்ச்சி உள் அரங்கத்தில் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் ஓ.பி.ஆர் நினைவுத் தொண்டு அறக்கட்டளை அறங்காவலர் திருமதி.தேவி மோகன் அவர்கள் தலைமை தாங்கி பேசும் போது, “இன்று நாடு முழுவதும் 78வது சுதந்திர தினத்தை இந்தியா கொண்டாடி வருகிறது. நாமும் இந்த கொண்டாட்டத்தில் கலந்து கொண்டு இருக்கிறோம். சுதந்திரம் பெறுவதற்காக எத்தனையோ தியாகங்களையும், இன்னுயிரையும்





ஈந்த தலைவர்களுக்கு நன்றி சொல்ல வேண்டிய நாள் இது. பெற்ற சுதந்திரத்தை பேணி காக்க வேண்டிய கடமையும், பொறுப்பும் அனைவருக்கும் உண்டு. சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் முதல் கொடி ஏற்றியவர் நமது ஓ.பி.ஆர் அவர்கள். அவர் நமக்கு கற்றுக் கொடுத்தவை சிக்கனம், நேர்மை, எளிமை, ஊழலற்ற நிர்வாகம், உண்மையை உரைப்பதில் நெஞ்சுரம். இவை அனைத்தும் இந்த அகாடமியில் இருந்து வெளியே செல்லுகின்ற மாணவர்களாகிய உங்களிடத்தில் இருக்கவேண்டும். முன்னுதாரணமாக வாழ்ந்து மறைந்த ஓ.பி.ஆரின் கொள்கையிலிருந்து எந்த சூழ்நிலையிலும் நீங்கள் பிறழாமல் நடந்து கொள்ளவேண்டும். அதுதான் நாம் பெற்ற சுதந்திரத்திற்கும், தியாகம் செய்த தலைவர்களுக்கும் செலுத்துகின்ற உண்மையான மரியாதையாகும். அதற்கு இந்த நாளில் உறுதியேற்க வேண்டும். இத்தகைய நல்ல பண்புகளை வளர்ப்பதற்காகத்தான் இந்த அகாடமியினுடைய இயக்குநர் Dr.V.செல்வராஜு அவர்கள் பாடுபட்டு வருகிறார். அதற்கான எல்லா உதவிகளையும் உங்களுக்கு செய்வதற்கும் இந்த அறக்கட்டளை தயாராக இருக்கிறது. அதனை பயன்படுத்திக் கொண்டு வாழ்க்கையில் முன்னேற வாழ்த்துகிறேன்” என்றார்.

ஓ.பி.ஆர் நினைவுத் தொண்டு அறக்கட்டளை நிறுவனரும், கே.ஆர்.டி. கேரியர் அகாடமி

இயக்குநருமான Dr.V.செல்வராஜு அவர்கள் தமது வரவேற்புரையில் பேசும் போது, “அனைவருக்கும் வணக்கம். காலையில் முதல் நிகழ்வாக கொடியேற்று விழா வெகுசிறப்பாக நடைபெற்றது. இனிப்பு வழங்கி கொண்டாடினோம். இரண்டாவது நிகழ்ச்சியாக அரங்கத்தில் நடைபெறும் இந்த நிகழ்ச்சிக்கு விழா பேருரை நிகழ்த்த இருக்கின்ற திருமதி.ரமாபிரபா மற்றும் அவரது கணவர் திரு.சேஷாத்ரி அவர்களையும், ஓ.பி.ஆர் அறக்கட்டளை அறங்காவலரும், இந்த அமைப்பின் ஆணிவேராகவும் திகழ்கின்றவரும், ஓ.பி.ஆரின் வாழ்க்கை வரலாற்றை புத்தகமாக வெளியிட்டு வருகின்ற திருமதி.தேவிமோகன் அவர்களையும், அறங்காவலர்கள் திரு.R.நந்தகுமார், திரு.R.ரமேஷ்குமார், திரு.R.புகழேந்திரன், திரு.R.காமராஜ், அகாடமியின் பயிற்றுனர் திரு.R.இராஜசேகரன், ரெட்டி இளைஞர் பேரவையின் துணைத் தலைவர் திரு.சுரேந்திரகுமார், நிர்வாகி திரு.ராஜேஷ், மகளிர் அமைப்பினர் திருமதி.சசிகலா செல்வராஜு, திருமதி.அனிதா அருண்குமார், பயிற்றுனர்கள், பணியாளர்கள் மற்றும் மாணவ, மாணவிகள் அனைவரையும் வருக, வருக என வரவேற்கிறேன்” என்றார்.

சிறப்பு விருந்தினராக கலந்துக் கொண்ட திருமதி.ரமாபிரபா அவர்களுக்கும், திரு.சேஷாத்ரி



அவர்களுக்கும் அறக்கட்டளை அறங்காவலர் திருமதி.தேவிமோகன் அவர்கள் பொன்னாடை போர்த்தி கௌரவித்தார். நினைவு பரிசினை ரெட்டி இளைஞர் பேரவையின் துணைத் தலைவர் திரு.சுரேந்திரகுமார் அவர்கள் வழங்கி கௌரவித்தார். தலைமைச்செயலக சார்பு செயலாளர் திரு.R.ரமேஷ்குமார் அவர்களுக்கு இயக்குநர் Dr.V.செல்வராஜு பொன்னாடை அணிவித்து, நினைவு பரிசு வழங்கி கௌரவித்தார்.





சார்புச் செயலாளர் திரு.R.ரமேஷ்குமார் அவர்கள் பேசும் போது, “இந்த அறக்கட்டளை சார்பில் தொடங்கப்பட்டுள்ள கே.ஆர்.டி. கேரியர் அகாடமி மிகக் குறுகிய காலத்தில் சிறப்பான முன்னேற்றத்தை கண்டுவருகிறது. இதற்கு அறக்கட்டளை நிறுவனரும், அகாடமி இயக்குநருமான Dr.V.செல்வராஜு அவர்களின் பங்கு அளப்பரியது. பாராட்டுக்குரியது. இதை நான் சபை நாகரீகம் கருதி முகஸ்துதிக்காக சொல்வதாக எண்ணவேண்டாம். 100 சதவீதம் அதற்கு தகுதியும், பொருத்தமும் அவருக்கு உண்டு. அவருடைய இடைவிடாத முயற்சி, உழைப்பு, தனக்கு கிடைத்த அனுபவங்களை கொண்டு ஒரு உயரிய இடத்திற்கு இந்த அகாடமியை வழிநடத்தி செல்கிறார் என்பது பெருமைக்கும், பாராட்டுக்கும் உரியதாகும். நாங்கள் எல்லாம் அவருக்கு இந்த அகாடமியை தொடங்க காரணமாக இருந்திருக்கலாம். ஆனால் அவர் அதைக் கொண்டு மிகப்பெரிய நிறுவனமாக மாற்றி வருகிறார். அதற்கு அறங்காவலர் திருமதி.தேவிமோகன் உள்ளிட்ட பலரும் பேருதவியாக இருந்து வருகிறார்கள். அவர்களுக்கும் இந்த நேரத்தில் பாராட்டுகளை தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைய சிறப்பு விருந்தினர் எனது பாசத்துக்குரிய சகோதரி திருமதி.ரமாபிரபா அவர்கள் மிகச்சிறந்த ஆளுமையும், திறமையும் கொண்டவர். அவரது செயல்பாடுகளை நான் அருகில் இருந்து பார்த்தவன். பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதில் சாதுரியமிக்கவர். ஓய்வு பெற்று இருந்தாலும் அவருடைய அனுபவங்களையும், ஆற்றலையும் இனி நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அவர் இந்த அறக்கட்டளைக்கு ஏதாவது ஒரு வகையில் தனது பங்களிப்பை வழங்கவேண்டும் என இந்த நேரத்தில் அனைவரின் சார்பிலும் கேட்டுக் கொள்கிறேன்” என்றார்.

சார்புச் செயலாளராக பணியாற்றி ஓய்வுப் பெற்ற திருமதி.ரமாபிரபா சேஷாத்ரி அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு பேசும் போது, “போட்டித் தேர்வுகளுக்கு தயாராகி வரும் நீங்கள் வாழ்க்கை முன்னேற்றத்திற்கும், நம்மை பக்குவப்படுத்துவதற்கும் தொடர்புடைய புத்தகங்களையும் படிக்கவேண்டும். நான் அதில் மிகுந்த ஆர்வமும், ஈடுபாடும் கொண்டவள். வீட்டுக்கு வெளிச்சம் தருவது ஜன்னல்கள், புத்தகங்கள் இல்லாத வீடு ஜன்னல்கள் இல்லாத சத்திரம் போன்றது. நம்மை ஏமாற்றாத ஒரு சிறந்த நண்பன் புத்தகம் தான். நல்ல புத்தகங்களைப் படிப்பதால் அறிவு வளரும், உயர்ந்த சிந்தனைகள் பிறக்கும், எண்ணங்கள் நேர்படும், நமது ஆற்றல்




பெருகும், திறமைகள் மிளிரும், உற்சாகம் ஊற்றெடுக்கும், சோர்வு அகலும், மனம் நிறைவு பெறும். சிறந்த முடிவுகளை எடுக்க புத்தகம் துணை புரியும், வாழ்க்கை மேம்படும், முன்னேற வழிக் கிடைக்கும். புத்தகங்கள் மட்டுமே, நமக்கு ஏற்படுகிற பிரச்சனைகளை தீர்க்க நல்ல வழிகளை நயம்பட சொல்லும். நல்ல புத்தகங்களைப் படித்து கெட்டுப்போனவர்கள் யாரும் இல்லை. புத்தகங்கள் படிப்பதை கடமையாய் கொண்டவர்களும், வாசிப்பதை உயிரென மதிப்பவர்களும் மிக உயர்ந்த நிலையை அடைந்துள்ளார்கள்.

புத்தகங்கள் பெற்றோரைப் போல அறிவுரை கூறும். மனைவியைப் போலத் தாங்கி நிற்கும், மக்களைப் போன்று மகிழ்ச்சியளிக்கும், நெருங்கிய நண்பனாய் ஆலோசனை வழங்கும். அறிவை விருத்தி செய்ய நல்லப் புத்தகங்களை நாளும் படிப்போம். வாழ்க்கையிலும் பயன்பெறுவோம். மனிதனுக்கு வழிகாட்டும் சிறந்த ஆசானாகவும் புத்தகங்களே இருக்கும். அந்த வகையில் சிறு வயதில் இருந்தே தங்களுடைய சிறு பிள்ளைகளுக்கு வாசிப்பை கற்றுக்கொடுத்து வாசிக்கத் தூண்டுவது பெற்றோருடைய கடமை. இன்று இங்கு இதனைக் கேட்கும் நீங்கள் நாளை சிறந்த பெற்றோர்களாகவும், அதிகாரிகளாகவும் மாற வாழ்த்துகள்" என்றார்.

முன்னதாக திருமதி.ரமாபிரபா அவர்கள் அகாடமி நடத்தும் மாணவர்களுக்கான நூலக வசதிகளைப் பார்வையிட்டு மகிழ்ச்சியையும், பாராட்டையும் தெரிவித்தார்.

நிறைவாக ஓ.பி.ஆர். நினைவுத் தொண்டு அறக்கட்டளை அறங்காவலர் திரு.R.காமராஜ் அவர்கள் நன்றி தெரிவித்து பேசும் போது, "இந்த அறக்கட்டளையின் சார்பில் நல்ல அதிகாரிகள் உருவாகி நாட்டிற்கும், பிறந்த வீட்டிற்கும், இந்த சமூகத்திற்கும் பெருமை சேர்க்க வேண்டும் என்று திருமதி.தேவி மோகன் அவர்களும், நல்ல புத்தகங்களை வாசித்து அதன் மூலம் தனது வாழ்க்கையை எப்படி பக்குவப்படுத்தி கொண்டு முன்னேற்றத்தையும், வளர்ச்சியையும் அடைய வேண்டும் என்கிற கருத்தினை தெரிவித்த திருமதி.ரமாபிரபா அவர்களுக்கும், தான் TNPSC மூலம் குரூப் V தேர்வு எழுதி பல்வேறு பதவி உயர்வுப் பெற்று இன்று சார்புச் செயலாளராக வருகைத் தந்து சிறப்புரை வழங்கிய திரு.R.ரமேஷ்குமார் அவர்களுக்கும் நன்றி. மேலும் இந்த அகாடமியை மிகக் குறுகிய காலத்தில் பிரபலமான நிறுவனங்களுக்கு இணையாக தரமான கல்வியை மாணவர்களுக்கு இலவசமாக வழங்குவதோடு, பல புதிய தொழில்நுட்பங்




களுடன் கே.ஆர்.டி கேரியர் அகாடமியை திறம்பட நிர்வகித்து வரும் Dr.V.செல்வராஜூ அவர்களுக்கும், பயிற்றுனர்களுக்கும், பணியாளர்களுக்கும் மற்றும் மாணவ, மாணவிகளுக்கும் அனைவரின் சார்பாக நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன்" என்றார்.

## ஓ.பி.ஆர் அறக்கட்டளைக்கு திருமதி.தேவிமோகன் ஒரு லட்சம் நிதி உதவி



ஓ.பி.ஆர் நினைவுத் தொண்டு அறக்கட்டளை அறங்காவலர் திருமதி.தேவிமோகன் அவர்கள் தனது மகள் திருமதி.ஸ்வர்ணா மோகன் அவர்களின் சார்பாக அறக்கட்டளைக்கு ரூபாய் ஒரு லட்சம் காசோலையாக வழங்கினார். Dr.V.செல்வராஜூ அவர்கள் ரெட்டியார் சமுதாயம் குறித்து **தமிழ்நாட்டில் ரெட்டியார்களின் சமூக கலாச்சாரம் மற்றும் அரசியல் வரலாறு ஓர் ஆய்வு,** SOCIO - CULTURAL AND POLITICAL HISTORY OF REDDIARS IN TAMIL NADU – A Study எனும் தலைப்பில் ஆய்வு செய்துள்ளார். அதனை புத்தகமாக வெளியிட வேண்டும் என பலர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். இதனை அவரும் ஏற்று கொண்டுள்ளார். எனவே அதனை விரைவில் புத்தகம் வெளியிடவேண்டும். ரூபாய் ஒரு லட்சம் அறக்கட்டளைக்கு நன்கொடை வழங்கினார். அதனை பெற்றுக் கொண்டு Dr.V.செல்வராஜூ அவர்கள் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

# விளாத்திகுளம் ரெட்டி ஜன சங்கம்



விளாத்திகுளம் ரெட்டி ஜன சங்கத்திற்கு பாத்தியப்பட்ட கவியரசர் அண்ணாமலை ரெட்டியார் நினைவுப் பள்ளியின் 31–ம் ஆண்டு விழா கடந்த 10.08.2024 அன்று நடைபெற்றது. விழாவில் காவடிச்சிந்து பாடலுக்கு பள்ளி மாணவிகளின் சிறப்பான நடனத்துடன் விழா தொடங்கியது.



நிகழ்ச்சியில் விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு.G.V.மார்கண்டேயன் அவர்கள் கலந்துக்கொண்டு சிறப்புரையாற்றினார். ஓய்வுப்பெற்ற நீதிபதி திரு.S.சரவணப்பெருமாள், விளாத்திகுளம் பேரூராட்சி மன்றத் தலைவர் திரு.சூர்யா அய்யன்ராஜ், விளாத்திகுளம் ரெட்டி ஜன சங்கத்தலைவர் திரு.இரா.ராமகிருஷ்ணன், செயலாளர் திரு.A.கிருஷ்ணசாமி, பொருளாளர் திரு.R.லட்சுமணப்பெருமாள், ஸ்ரீ அம்பாள் வித்யாலயா பள்ளி செயலாளர் திரு.S.K.சுப்பாரெட்டியார், ஸ்ரீஅம்பாள் வித்யாலயா பள்ளி நிர்வாக அலுவலர் திரு.ராகவன், விளாத்திகுளம் பேரூராட்சி வார்டு உறுப்பினர் திரு.மகேந்திரன், கல்விக்குழு உறுப்பினர்கள் திரு.இளங்கோவன், திரு.சங்கர்ராம், பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவர் திரு.ராகவன், விளாத்திகுளம் சட்டமன்றத் தொகுதி திமுக தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் திரு.ஸ்ரீதர் உள்ளிட்டோர் கலந்துக்கொண்டு விழாவினை சிறப்பித்தனர். விளாத்திகுளம் ரெட்டி ஜன சங்கத் தலைவர் திரு.இரா.ராமகிருஷ்ணன் அவர்கள் தலைமை உரை நிகழ்த்தினார்.

நிகழ்ச்சியில் விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு.G.V.மார்கண்டேயன் அவர்கள் கலந்துக்கொண்டு 12-ம் வகுப்பில் முதல் மதிப்பெண் பெற்ற மாணவி செல்வி.சஹானா அவர்களுக்கு தங்க மோதிரம் வழங்கி சிறப்புரையாற்றும் போது, “நமது கவியரசர் பள்ளியின் 31வது ஆண்டு விழாவினை சிறப்பாக நடத்தி வரும் நிர்வாகத்திற்கு வாழ்த்துகள். 100 சதவீத வெற்றி இலக்கை தொடர்ந்து இந்தப் பள்ளி தன் வசம் வைத்துக் கொண்டிருப்பதற்காக தலைமை ஆசிரியர் உள்ளிட்ட அனைத்து ஆசிரியர்களையும் பாராட்டுகின்றேன், வாழ்த்துகின்றேன். முதல் மதிப்பெண் சஹானா விற்கும், அவரது பெற்றோருக்கும் வாழ்த்துகள். இன்றைய தினம் கல்வி என்பது முக்கியம். யாரை கேட்டாலும் கல்வி தான் முக்கியம் என்பதை அனைவரும் ஏற்றுக் கொள்வார்கள். பள்ளிக்கு செல்பவராக இருந்தாலும் சரி அல்லது தொழில்ரீதியாக முன்னேறுபவராக இருந்தாலும் சரி, கல்வி மிக முக்கியம். இது வாழ்க்கையில் எல்லாவற்றுக்கும் தொடக்கமாகும். உலகை மாற்றக்கூடிய மிக முக்கியமான ஆயுதம் கல்வி என நெல்சன் மண்டேலா குறிப்பிட்டார். மாணவர்கள் தங்கள் இலக்கை நோக்கி கடினமாக உழைத்தால் இந்த உலகில் எதையும் சாதிக்க முடியும். மாணவர்களின் வாழ்க்கையின் பிற்பகுதியை போட்டித் தேர்வுகள், வேலை வாய்ப்புகள், உயர் பதவிகள் போன்றவற்றில் நுழையும் போது இங்கு படிக்கும் கல்வி உதவியாக இருக்கும். சக





மனிதர்களிடம் அனுதாபம், பச்சாதாபம் மற்றும் மரியாதையை வளர்த்து கொள்ள, கட்டியெழுப்ப ஒவ்வொரு தனி மனிதனும் அடிப்படைக் கல்வியை பெறுவது முக்கியம். மேலும் சமூகம் அமைதியான மற்றும் வளர்ந்து வரும் வாழ்க்கையை வாழ கல்வி உதவுகிறது.


ஓய்வுபெற்ற நீதிபதி திரு.S.சரவணப்பெருமாள் அவர்கள் பேசும் போது, “பள்ளி மாணவர்கள் எதிர்காலத்தை திட்டமிட அவசியமானதாக கருதப்படும் 10, 11 மற்றும் 12ம் வகுப்புக்கான தேர்வுகளில் சிறப்பான கவனத்தை செலுத்த வேண்டும். மனப்பாடம் செய்தால் படித்தது நினைவில் நிற்காது. படித்ததை மனதில் நிறுத்தியும், எழுதியும் பார்க்க வேண்டும். ஒவ்வொரு நாளும் படிக்க வேண்டிய பாடங்களை குறித்து முன்கூட்டியே திட்டமிட்டு அதன்படியே படிக்கவேண்டும். மாணவர்கள் பாடங்களை திட்டமிட்டு படிப்பதோடு அதை எழுதி பார்ப்பது தேர்வு பயத்தை போக்கி வெற்றியை உறுதிபடுத்தும். இதற்கு எல்லா வகையிலும் கவியரசர் பள்ளி நிர்வாகம் உங்களுக்கு துணை நிற்கும் என்றார்.

நிறைவாக பொருளாளர் திரு.R.லட்சுமணப் பெருமாள் அவர்கள் வந்திருந்த அனைவருக்கும் நன்றியினை தெரிவித்துக் கொண்டார்.

# திரு.ப.ஜெய்பிரகாஷ் சாரால் பொது அறிவு தகவல் தொகுப்பு







## சாரல் பொது அறிவு தகவல் தொகுப்பகம்

D.No.358, அண்ணாநகர், தென்னூர், திருச்சி - 17

நூல் தொகுப்பாசிரியர் :
ப.ஜெய்பிரகாஷ், 94434 82838
மத்திய புள்ளியியல் துறை ( ஓய்வு ) திருச்சி

**விலைப் பட்டியல்**

| | | |
|---|---|---|
| 1. கண்டு பிடிப்புகளின் வரலாறு | – | ரூ.150.00 |
| 2. உலக சிறப்புகளின் வரலாறு | – | ரூ.150.00 |
| 3. சாதித்த பெண்களின் வரலாறு | – | ரூ.150.00 |
| 4. வரலாறு படைத்தோரின் வரலாறு | – | ரூ.150.00 |
| | | ரூ.650.00 |

## புத்தகங்களை நேரிலும் தபாலிலும் பெறலாம்

**தபால் செலவு இலவசம்**

**புத்தகத்திற்கு பணம் செலுத்த : G.Pay. Number : 94435 69159**

**தொடர்புக்கு :**
**ப.ஜெய்பிரகாஷ், 94434 82838**

# தேசியப் பேரொ

## நூல் வெளி

# ஓ.பி.ஆர் நினை

**நாள்**
25.08.2024
**நேரம்**
காலை 10.00
**இடம்**
கே.ஆர்.டி. பில்டிங், எண்.34A,
கங்கையம்மன் கோயில் தெரு,
ஜாபர்கான்பேட்டை,
சென்னை - 600 083.

இந்த நூல் ஐதராபாத் இணைப்பை மட்டும் வெளிக்கொண்டு வரவில்லை. மாறாக, ஓமந்தூராரின் முழு வாழ்க்கை வரலாற்றை அறிந்து கொள்ளும் ஒரு நூலாக அமைந்துள்ளது. ஏனெனில் ஐதராபாத் இணைப்புக்குப் பிறகு ஓமந்தூராரைப் பற்றிய பல குறுஞ்செய்திகள் சுவையாக வாசிப்பவர்கள் கவனத்தை ஈர்த்துள்ளது. வரலாற்று மாணவர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் பிற வாசகர்கள் மத்தியில் இந்நூல் சிறப்பான ஒரு வரவேற்பினை பெறும் என்பதில் ஐயமில்லை.

ஒரே பாரதம் – உன்னத பாரதம் என தேசம் உயர்ந்த நிலையை எட்ட தொலைநோக்குப் பார்வையுடன் பணியாற்றியவர் ஓமந்தூரார். எண்ணிலடங்கா சாதனைகள் பல நிகழ்த்திய ஓமந்தூராரின் வரலாற்றில் ஐதராபாத் இணைப்பு வரலாறு முக்கிய இடம் வகிக்கிறது. அந்த வகையில், ஐதராபாத் நிகழ்வுகள் குறித்து, அடுக்கடுக்கான ஆதாரங்களுடன் காலவரிசைப்படி நூலாசிரியர் தேவிமோகன் அவர்கள் மிகவும் அழகாக பதிவு செய்துள்ளார்.
– மேதகு M.வெங்கையா நாயுடு
முன்னாள் குடியரசு துணைத் தலைவர்

குறைந்த அளவு ஆங்கிலப் புலமையும், விவசாயப் பின்புலமும் கொண்ட ஓமந்தூரார். சிறந்த நிர்வாகத்திறனாலும், சிறந்த ஆளுமை காரணமாகவும் விரிந்து பரந்த பாரதத்தைக் கட்டமைப்பதில் பெரும் பங்காற்றினார். ஐதராபாத் இணைப்பு விவகாரத்தைப் பொறுத்தவரை தேசிய அரசியல் வரலாற்றில் நிஜ ஹீரோ ஓமந்தூரார்.
– மாண்புமிகு கே.என்.நேரு
நகராட்சி, நிர்வாகத் துறை அமைச்சர்

எளிய நடை – தெளிந்த நீரோடை போன்ற சொல்வளம் – பசுமரத்தாணி போல நெஞ்சில் பதியும் கருத்துகள் – தேதி வாரியாக வரலாறு என எந்த ஒரு நிகழ்வையும் விட்டுவிடாமல் அத்துணை நிகழ்வுகளையும் முழுமையாக நூலாசிரியர் பதிவு செய்துள்ளார்.
– திரு. வெ.வைத்திலிங்கம் M.P.
முன்னாள் முதலமைச்சர், புதுச்சேரி


0018623
thamizhbooks.com பாரதி புத்தகாலயம் புத்தகம் பேசுது
ISBN 978-93-480-3605-6
9 789348 036056

**விழா ஏற்பாடு : ஓ.பி.ஆர். நினைவுத் தொண்**

# ளி ஓமந்தூரார்


## ரியீட்டு விழா

## வு நாள் வெளியீடு




**நூல் வெளியிடுபவர்**
**திரு.R.பூர்ணலிங்கம் IAS ஓய்வு**
மூத்த இந்திய ஆட்சிப் பணி அதிகாரி

**முதல் பிரதியை பெறுபவர்**
தொழிலதிபர் **திரு.ரமேஷ் ரங்கநாதன்**
அறங்காவலர், ஓ.பி.ஆர் அறக்கட்டளை
உரிமையாளர் : VKS சுரங்க சேவைகள், சென்னை



**தேவி மோகன் (எ) பாரதிதேவி**
சமூக மற்றும் கல்வித் துறையில் ஆகச் சிறந்த ஆளுமை மிக்கவர். ஓ.பி.ஆர். அறக்கட்டளை நிர்வாகிகளில் ஒருவரான இவர் ஏழை–எளிய மாணவர்களுக்கு கல்வி எனும் ஒளியை வழங்குவதில் கலங்கரை விளக்கமாகத் திகழ்கிறார். நூலாசிரியர் திருமதி.தேவிமோகன் அவர்கள் ஓ.பி.ஆர். என அழைக்கப்படும் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் மீது அதீத அன்பும், பெருமதிப்பும் கொண்டவர். இவரது தந்தை பெயரும் ராமசாமி ரெட்டியார் என்பது சிறப்பம்சம். ஓமந்தூராரின் பிறந்தநாளும், நூலாசிரியரின் பிறந்தநாளும் ஒன்று என்பது மற்றொரு சிறப்பம்சமாகும். ஓமந்தூரார் குறித்து தேவிமோகன் (எ) பாரதி தேவி எழுதிய மூன்றாவது நூல் இது.

**ண்டு அறக்கட்டளை, சென்னை | 9688877722**

# சிறப்பு விருந்தினர் Dr.J.விஜயராணி IAS அவர்களுடன் KRT கேரியர் அகாடமியினர்








# டாக்டர்.அ.வெ.ர.கிருஷ்ணசாமி ரெட்டியார் திருவுருவச் சிலைத் திறப்புவிழா







15.07.2024 திங்கட்கிழமை அன்று திருச்சி மாவட்டம், துறையூர் வட்டம் து.ரெங்கநாதபுரம் ஸ்ரீகிருஷ்ணம்மாள் வித்யாசாலை மான்ய நடுநிலைப்பள்ளி வளாகத்தில் கவிதாமணி, உபயபாஷா ப்ரவீண, செந்தமிழ் கவிதைச் செம்மல், தர்மரக்ஷாமணி, அருட்பணிச்செல்வர் டாக்டர்.அ.வெ.ர.கிருஷ்ணசாமி ரெட்டியார் D.LITT அவர்களின் திருவுருவச்சிலைத் திறப்பு விழா நடைபெற்றது.



நிகழ்ச்சியில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் மாண்புமிகு. கே.என்.நேரு அவர்கள் தலைமை தாங்கி திருவுருவச் சிலையை திறந்து வைத்து மலர் தூவி அஞ்சலி செலுத்தினார். நிகழ்ச்சிக்கு ஓய்வு பெற்ற சென்னை தொலைக்காட்சி நிலைய இயக்குநர் திரு.எம்.எஸ்.பெருமாள் அவர்கள் முன்னிலை வகித்தார். ஆன்மீகப்பேச்சாளர் திரு.சுகிசிவம் அவர்கள் சிறப்புரை ஆற்றினார்.

நிகழ்ச்சியில் திருச்சி தமிழ் சங்கம் நிர்வாகி திரு.உதயகுமார் பெரியசாமி மற்றும் ஏஜிஎம் கல்வி நிறுவனத்தின் தாளாளரும், எரகுடி பனானாலீப் உணவக உரிமையாளருமான திரு.இரா.மனோகரன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினர்.

டாக்டர் அ.வெ.ர.கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்கள் தமிழ் மற்றும் வடமொழியில் புலமை வாய்ந்தவர். நாடு சுதந்திரம் அடைவதற்கு முன்பே 'கிராம ஊழியன்' என்ற தனி இலக்கிய இதழ் துறையூரில் 1943-47 காலக்கட்டத்தில் தொடங்கப்பட்டது. அதில் தமக்கென ஒரு சிறப்பிடத்தை பெற்று பல்வேறு கட்டுரைகளை எழுதியவர். இவ்விதழ் மாதம் இருமுறை வெளிவந்த சிற்றிதழ் ஆகும். இவ்விதழின் உள்ளடக்கம் பொழுதுபோக்காக இல்லாமல் நுட்பமான மூளைச் செறிவேற்றுகிற இதழாக இருந்தது. கருத்தினை பன்முக ஆற்றலோடு காணுகிற தன்மையும், அதன் உள்ளார்ந்த நுட்பத்தை வெளிப்படுத்துகிற தன்மையும் ஒவ்வொரு படைப்புகளிலும் மேலோங்கியிருந்தது. இதழின் பக்கங்கள் நேர்த்தியாக அச்சிடப்பட்டு வெளியானது. சாதாரண அச்சு இயந்திரத்தை வைத்து தற்கால ஒளியச்சு முறையையும் விஞ்சும் அளவிற்கு வெளியிடப்பட்டு வந்தது. இவ்விதழின் மீது இவர் கொண்டிருந்த ஈடுபாட்டை அது வெளிப்படுத்தியது. பிற்காலத்தில் சிறப்பாகப் பேசப்பட்ட இலக்கிய எழுத்தாளர்கள் இவருடன் இணைந்து கட்டுரை எழுதி வந்தனர். மணிக்கொடி என்கிற தேசிய வாரப் பத்திரிகை எழுத்தாளர்கள் இவரிடம் பணிபுரிந்தனர்.

கிராமப்புற பகுதியில் சுமார் 70 ஆண்டுகள் முன்பே திருச்சி மாவட்டம், துறையூர் வட்டம் து.ரெங்கநாதபுரம் கிராமத்தில் ஸ்ரீகிருஷ்ணம்மாள் வித்யாசாலை மான்ய நடுநிலைப் பள்ளியை நிறுவியுள்ளார். மாவட்ட அளவிலான அறங்காவலர் குழுவிலும் இவர் பணியாற்றியவர். தமிழ் சங்கங்களுடன் தொடர்புடையவர். இவரது பிறப்பு, கல்வி, இலக்கிய பணி, எழுத்தாளர், பதிப்பாளர், ஆன்மீகப் பணி என இவரது வாழ்க்கையில் ஏற்பட்ட பல்வேறு அம்சங்களை இந்த திருவுருவ சிலைத் திறப்பு நாளில் தொகுத்து வழங்குவதில் பெருமை கொள்கிறோம்.

## அ.வெ.ர.கிருஷ்ணசாமி ரெட்டியார் இளமைப்பருவம்

'அ.வெ.ர.கி' என சுருக்கமாக அழைக்கப்படும் அருணாசல வெங்கடாசலம் ரங்கசாமி கிருஷ்ணசாமி ரெட்டியார் ஜூலை 15, 1918-ல், இலங்கையில் ரங்கசாமி ரெட்டியார்—கிருஷ்ணம்மாள் தம்பதியருக்கு மகனாகப் பிறந்தார். தந்தை இலங்கையில் புசந்தனை என்ற தேயிலைத் தோட்டத்தின் உரிமையாளராகவும், மிளகுசேவை என்ற தோட்டத்தின் கங்காணியாகவும், கண்காணிப்பாளராகவும் இருந்தார். இவர் தனது இரண்டாம் வயதில் தந்தையை இழந்தார். குடும்பம் தமிழகம் வந்தது. அ.வெ.ர.கிருஷ்ணசாமி ரெட்டியார், துறையூர் அருகே உள்ள ரெங்கநாதபுரத்தின் திண்ணைப் பள்ளியில் பயின்றார். தொடக்கக்கல்வியை துறையூர் ஜமீன்தார் பள்ளியில் கற்றார். முசிறி போர்டு உயர்நிலைப்பள்ளியில் எட்டாம் வகுப்பு

வரை பயின்றார்.

### இல்லற வாழ்க்கை

அ.வெ.ர. கிருஷ்ணசாமி ரெட்டியார், 1931-ல், தங்களது பூர்வீகச் சொத்துக்களையும், தேயிலைத் தோட்டத்தையும் கவனித்துக் கொள்வதற்காக இலங்கை சென்றார். 1935-ல், கிருஷ்ணம்மாளுடன் திருமணம் நிகழ்ந்தது. மகன் சுபாஷ்சந்திரன். முதல் மனைவி கிருஷ்ணம்மாள் காலமானதால் ராஜாமணியைத் திருமணம் செய்து கொண்டார். இவர்கள் மகன் பிரசன்னம். இரண்டாவது மனைவி ராஜாமணியும் நோய்வாய்பட்டு காலமானதால், மூன்றாவதாக ராஜம்மாளைத் திருமணம் செய்துகொண்டார். இவர்களுக்கு கண்ணன், குமரேசன் என இரு மகன்கள்.

தனது சொத்துக்களை நிர்வாகம் செய்வதற்காக இலங்கையிலும் தமிழ்நாட்டிலும் மாறி மாறி வசித்த அ.வெ.ர.கிருஷ்ணசாமி ரெட்டியார், இலங்கையில் உள்ள அனைத்துச் சொத்துக் களையும் விற்றுவிட்டு, 1941-ல், நிரந்தரமாகத் தமிழகத்தில் வந்து தங்கினார்.

### இலக்கிய வாழ்க்கை

அ.வெ.ர.கிருஷ்ணசாமி ரெட்டியாரின் தாய் மொழி தெலுங்கு என்றாலும், தமிழை விரும்பிக் கற்றார். பள்ளி ஆசிரியர்கள் மூலம் இலக்கியங்களில் ஆர்வம் கொண்டு பல பாடல்களை மனனம் செய்தார். பாரதியின் கவிதைகள் அவரை மிகவும் ஈர்த்தன. தினந் தோறும் பாரதியின் பாடல்களைப் பயில்வதைத் தனது வழக்கமாகக் கொண்டார்.

### இதழியல் வாழ்க்கை

அ.வெ.ர.கிருஷ்ணசாமி ரெட்டியார், துறையூரில் வசித்த போது, கிராம ஊழியன் என்னும் இதழை நடத்தி வந்த பூர்ணம் பிள்ளையின் நட்பு ஏற்பட்டது. இதழியல் நுணுக்கங்களை அவரிடமிருந்து அறிந்து கொண்டார். 'கிராம ஊழியன்' இதழை நடத்தி வந்த பூர்ணம்பிள்ளை காலமானதால் இதழை நடத்தும் பொறுப்பை கிருஷ்ணசாமி ரெட்டியார் ஏற்றுக் கொண்டார். அவரும் கவிஞர் திருலோக சீதாராமும் இணைந்து அவ்விதழை நடத்தினார்கள். அது காங்கிரஸ் இயக்கம் சார்பாக வெளிவந்து கொண்டிருந்தது. அதனை இலக்கிய இதழாக நடத்த விரும்பிய கிருஷ்ணசாமி ரெட்டியார், கு.ப.ராஜகோபாலனை அந்த இலக்கிய இதழின் ஆசிரியராக நியமனம் செய்தார். ஆகஸ்ட் 13, 1915 முதல் இலக்கிய இதழாக கிராம ஊழியன் வெளிவரத் தொடங்கியது. அ.வெ.ர.கிருஷ்ணசாமி ரெட்டியார் வெளியீட்டாளராகவும், திருலோக சீதாராம் ஆசிரியராகவும், கு.ப.ராஜகோபாலன் கௌரவ ஆசிரியராகவும் செயல்பட்டனர். ந.பிச்சமூர்த்தி, கரிச்சான்குஞ்சு, ஸ்வாமிநாத ஆத்ரேயன், கி.ரா.கோபாலன், தி.ஜானகிராமன், எம்.வி.வெங்கட்ராம், வல்லிக்கண்ணன் உள்ளிட்ட பலரது படைப்புகள் இவ்விதழில் வெளியாகி இலக்கியம் வளர்த்தன. தி. ஜானகிராமனின் முதல் புதினமான அமிர்தம் கிராம ஊழியனில் தான் தொடர்கதையாக வெளிவந்தது. கு.ப.ராஜகோபாலன் அவர்களின் மறைவிற்குப்



பின் வல்லிக்கண்ணனின் உறுதுணையுடன் அவ்விதழை நடத்தினார் கிருஷ்ணசாமி ரெட்டியார்.

### சிவாஜி

கிருஷ்ணசாமி ரெட்டியார், 1947-ம் ஆண்டு கிராம ஊழியன் இதழை நிறுத்திவிட்டு திருலோக சீதாராமுடன் இணைந்து சிவாஜி என்ற இதழைத் தொடங்கி நடத்தினார். சிவாஜி இதழ் 1968 வரை வார இதழாகவும், 1969 முதல் 1973 வரை மாத இதழாகவும் வெளி வந்தது. கௌசிகன் என்னும் வாண்டுமாமாவிற்காகவே சிவாஜி இதழில், சிறுவர் மலர் என்ற பகுதியை ஆரம்பித்து அதற்கு அவரை ஆசிரியர் ஆக்கினார்.

### எழுத்தாளன்

அ.வெ.ர.கிருஷ்ணசாமி ரெட்டியார், திருச்சி தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் சார்பில், எழுத்தாளன் என்ற இதழைத் தொடங்கி நடத்தினார். தமிழ், ஆங்கிலம் இரு மொழிகளில் இவ்விதழ் வெளிவந்தது.

### பதிப்பாளர்

அ.வெ.ர. கிருஷ்ணசாமி ரெட்டியார், கண்ணன் அச்சகம் என்னும் அச்சகத்தையும், புதுப்புனல் என்ற பதிப்பகத்தையும் நிறுவிப் பல நூல்களை வெளியிட்டார்.

### அரசியல் வாழ்க்கை

அ.வெ.ர.கிருஷ்ணசாமி ரெட்டியார் காந்தி மீதும், காங்கிரஸ் மீதும் மிகுந்த பற்றுக் கொண்டு தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியில் உறுப்பினராகவும் தன்னை இணைத்துக் கொண்டார். ரெங்கநாதபுரம் காங்கிரஸ் கமிட்டித் தலைவராகப் பணியாற்றினார். ப.ஜீவானந்தம் தலைமறைவு வாழ்க்கை வாழ்ந்த போது துறையூரில் உள்ள தன் வீட்டில் ஆறு மாத காலம் ரகசியமாக அவரைத் தங்க வைத்தார். ராஜாஜி, காமராஜர் எனப் பல்வேறு அரசியல் தலைவர்களுடன் தொடர்பில் இருந்தார். காங்கிரஸ் மாநாடுகளில் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றினார்.

### இலக்கியச் செயல்பாடுகள்

அ.வெ.ர.கிருஷ்ணசாமி ரெட்டியார், பாரதி நூற்றாண்டு விழாக் குழுவில் உறுப்பினராக இருந்த போது பாரதியின் வாழ்க்கை வரலாற்றைக் கண்காட்சியாக அவ்விழாவில் காட்சிப் படுத்தினார். தனியாரிடமிருந்து பாரதி பாடல்களின்

உரிமையை அரசு பெறுவதற்காக டி.கே.எஸ் சகோதரர்களுடன் இணைந்து போராடினார். பாரதியின் பாடல்கள் நாட்டுடைமை ஆவதற்கு உழைத்தார்.

திருச்சியில் எழுத்தாளர் சங்கத்தை உருவாக்கி அதன் மூலம் எழுத்தாளர் மாநாட்டை நடத்தினார். தமிழ்நாட்டின் பல மாவட்டங்களில் எழுத்தாளர் சங்கங்கள் தோன்றக் காரணமானார். திருச்சி வானொலியில் சிந்தனைச் சுடர், அருள்வாக்கு போன்ற நிகழ்ச்சிகளில் சிந்தனையாளர்கள், அருளாளர்களின் கருத்துக்களைக் குறித்துச் சொற் பொழிவாற்றினார். கவிதை, நாடகம், விமர்சனம், இசைப் பாடல்கள் என பல்வேறு தலைப்புகளில் உரையாற்றினார். பல்வேறு இலக்கியக் கூட்டங்களில், எழுத்தாளர் மாநாடுகளில், தமிழ்ச் சங்கக் கூட்டங்களில், கருத்தரங்குகளில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

### ஆன்மிகம்

அ.வெ.ர.கிருஷ்ணசாமி ரெட்டியார், ஆலய விழா நிகழ்வுகளில் சமயச் சொற்பொழிவுகள் ஆற் றினார். பல்வேறு ஆலயங்களைப் புதுப்பிக்கும் பணியை மேற்கொண்டு செயல்பட்டார். ஸ்ரீ ரங்கம் ராஜகோபுர நிர்மாணிப்புப் பணியில் ஈடுபட்டார். பல்வேறு ஆன்மிக நற்பணிகளை மேற்கொண்டார்.

அ.வெ.ர.கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்கள் சௌந்தர்ய லஹரி எனும் வடமொழி நூலை 'அழகின் வெள்ளம்' என மொழி பெயர்த்தார். சௌந்தர்யம் என்றால் அழகு. லஹரி என்றால் அலைகள் நூறு பாடல்களிலும் பார்வதி தேவியின் அழகும், அருளும் அற்புதமாகத் தாண்டவ மாடுகின்றன. சௌந்தர்ய லஹரியின் 99–ம் ஸ்லோகத்தின்படி, இதனைப் பாராயணம் செய்பவர்களுக்கு பார்வதி தேவியின் எல்லையில்லா அருளோடு, சரஸ்வதி கடாக்ஷமும், லக்ஷ்மி கடாக்ஷமும் கிட்டும் என சொல்லப்படுகிறது. இதனை ஆடி மாத செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் நாமும் சௌந்தர்ய லஹரியைச் சொல்லி தேவியின் அருள் பெற்று நலமாக வாழலாம் என்பது ஒரு நம்பிக்கை என்கிற செய்தி திருவானைக்கோவில் அகிலாண்டேஸ் வரி கோவிலிலும், சென்னை கச்சாளீஸ்வரர் ஆலயத்திலும் உள்ள கல்வெட்டில் பொறிக்கப்பட்டுள்ளது.

அதேபோல் சுப்ரமண்ய புஜங்கம் தமிழ் மொழிபெயர்ப்பு இவரால் செய்யப்பட்டது. திருச் செந்தில் நாதன் திருவடியில் மணக்கும் புஜங்க மென்னும் இப்பாடல்களை ஆர்வத்துடன் படிப்போர் திருமகள் போன்ற பெண்டு, பிள்ளைகள், சிறப்பு, இன்பவாழ்வு முதலியவற்றால் சிறப்படைந்து நீடூழி வாழ்ந்து பேரின்பமயமான மோட்சத்தை அடைவார்கள் என திருச்செந்தூர் ஆலய கல்வெட்டில் பொறிக்கப்பட்டுள்ளது.

### இவரது நூல்கள்

தல வரலாற்று நூல்கள், வாழ்க்கை வரலாற்று நூல்களை படைத்தவர். குறிப்பாக திருச்சி மாவட்டத்தில் அமைந்துள்ள ஆன்மிக தலமான வயலூர் வரலாறு, மலைக்கோவில் வரலாறு, திருச்சி ஸ்ரீநாகநாத சுவாமி கோவில் தல வரலாறு, குணசீலம் ஸ்ரீ பிரசன்ன வெங்கடேசப் பெருமாள் கோயில் க்ஷேத்திர வரலாறு, வெக்காளி அம்மன் கோவில் தல வரலாற்று நூல்களை எழுதியவர். சேந்தமங்கலம் அவதார ஸ்ரீ கிருஷ்ணானந்த ப்ரம்மேந்திர சரஸ்வதி விஜயம், புதுக்கோட்டை அதிஷ்டானமும் அவதூதர் மூவரும் என்கிற வாழ்க்கை வரலாற்று நூல்களை எழுதி இருக்கிறார்.

சிறப்புடன் வாழ்க, வாழ்க்கையை எப்படி நடத்துவது?, எங்கிருந்தோ வந்தான் என்கிற தலைப்புகளில் கட்டுரைகளை எழுதியவர்.

அஞ்சலி கவிதைகள், தாயுமானவர் அந்தாதி, வயலூர் வள்ளல், சபரிமலை ஐயப்பன் தோத்திரம் என்கிற கவிதை நூல்களையும், அழகு வெள்ளம் (சௌந்தர்ய லஹரி) சிவானந்த வெள்ளம் (சிவானந்த லஹரி), ஸ்ரீ சுப்ரமண்ய புஜங்கம், கனகதாரா (பொன்மாரி) ஸ்தோத்திரம், ஸ்ரீ ருத்ரம், நவக்கிரக தோத்திரம், ஸ்ரீமத் பகவத் கீதை, அருள் அமுது என்கிற மொழி பெயர்ப்பு நூல்களை எழுதி தமிழுக்கும், தமிழ் மொழிக்கும் பெருமை சேர்த்ததன் மூலம் ரெட்டியார் சமுதாயத்தின் அடையாளமாக திகழ்கிறார்.

### அ.வெ.ர.கி வகித்த பொறுப்புகள்

- திருச்சி தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவர்
- அனைத்திந்திய தமிழ் எழுத்தாளர் சங்கச் செயலாளர்
- சாகித்ய அகாடமி உறுப்பினர்
- சம்ஸ்கிருத சாகித்ய பரிஷத் உறுப்பினர்
- தமிழ்நாடு இந்து சமய மன்ற துணைத்தலைவர்
- கோவில்கள் திருப்பணிக் குழுத் தலைவர்
- திருச்சி மாவட்ட வியாபாரிகள் சங்கத் தலைவர்
- தமிழ்நாடு ஆலயப் பாதுகாப்புக் குழுத் தலைவர்
- திருச்சி மாவட்ட அறங்காவல் குழு உறுப்பினர்
- ஆலயங்கள் திருப்பணிக்குழுத் தலைவர் (பல்வேறு ஆலயங்கள்)

### அ.வெ.ர.கி பெற்ற விருதுகள்

- காஞ்சி காமகோடி பீட சங்கராச்சாரியார் வழங்கிய கவிதாமணி பட்டம்.
- சிருங்கேரி சாரதா பீட சங்கராச்சாரியார் வழங்கிய உபய பாஷப்ரவீணா பட்டம்.
- தருமபுரம் ஆதீனகர்த்தர் சண்முக தேசிக ஞானசம்பந்தர் வழங்கிய செந்தமிழ்க் கவிதைச் செம்மல் பட்டம்.
- வாகீச பக்த ஜன சங்கம் வழங்கிய அருட்பணிச் செல்வர் பட்டம்
- சாந்தானந்த சுவாமிகள் வழங்கிய தர்மரக்ஷாமணி பட்டம்
- உலகப்பல்கலைக்கழகம் வழங்கிய டாக்டர் பட்டம்

### மறைவு

எழுத்தாளர், இதழாளர், பதிப்பாளர் இவற்றோடு அரசியல்வாதி, இலக்கியவாதி, ஆன்மிகவாதி, சொற்பொழிவாளர் எனப் பல தளங்களில் செயல்பட்ட முன்னோடி அறிஞராக அ.வெ.ர. கிருஷ்ணசாமி ரெட்டியார் ஜூலை 17, 1989-ல் காலமானார். அ.வெ.ர.கிருஷ்ணசாமி ரெட்டியார் குடத்துள் இட்ட விளக்கல்ல, குன்றின் மேல் இட்ட விளக்கு. அவரது புகழ் நிலைத்து நிற்க

# தொண்டு நிறுவனங்களுக்கான பயிற்சி




டெல்லியைச் சேர்ந்த **விஷ்வ யுவ கேந்திரா** மற்றும் கரூர் மாவட்டம், குளித்தலையை தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வரும் **கிராமியம்** தொண்டு நிறுவனமும் இணைந்து திருச்சி பிராட்டியூரில் தொண்டு நிறுவனங்களுக்கென மேலாண்மை மற்றும் ஆதாரங்களை வளப்படுத்துவதற்கான சிறப்பு பயிற்சி முகாம் கடந்த ஜூலை 30 முதல் ஆகஸ்ட் 1 வரையிலான மூன்று நாட்கள் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு திருச்சிராப்பள்ளி மாவட்ட நல நிதிக் குழு, பொருளாளர் சேவை திரு.டாக்டர். கே.கோவிந்தராஜு அவர்கள் தலைமை தாங்கினார். திருச்சி **ஸ்கோப்** நிறுவனத்தின் இயக்குநர் பத்மஸ்ரீ.எம்.சுப்புராமன் அவர்கள் துவக்கி வைத்தார். 'கிராமியம்' நிறுவனத்தின் இயக்குனர் குளித்தலை டாக்டர்.P.நாராயணன் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்.

டெல்லி விஷ்வ யுவகேந்திரா திட்ட அதிகாரி திரு.ரஜத் தாமஸ் அவர்கள் பயிற்சி நோக்கம் குறித்து எடுத்துரைத்தார். திருச்சி தேசிய தொழில்நுட்ப நிறுவனத்தின் (NIT) பேராசிரியர் திரு.டாக்டர்.V.சிவராமகிருஷ்ணன் அவர்கள் முன்னிலை வகித்தார்.

திருச்சி பிராட்டியூர் தமிழ்நாடு பாமரர் ஆணையம் செயலாளர் அருட்தந்தை மரியா மைக்கல் மற்றும் திரு.S.அண்ணாதுரை ஆகியோர் சிறப்புரை நிகழ்த்தினார்கள். ஓ.பி.ஆர் நினைவுத் தொண்டு அறக்கட்டளை நிறுவனர் Dr.V.செல்வராஜு அவர்கள் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார். கே.ஆர்.டி. கேரியர் அகாடமியின் சார்பில் திரு.S.ரவீந்திர ரெட்டி நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டார்.

நிகழ்ச்சியில் 'கிராமியம்' நிறுவன இயக்குனர் குளித்தலை டாக்டர்.P.நாராயணன் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தி பேசும் போது, "தமிழகம் முழுவதிலும் இருந்து வருகைத் தந்திருக்கின்ற அறக்கட்டளைகள், அரசு சாரா நிறுவனங்கள் (என்ஜிஓக்கள்) மற்றும் சமூகங்கள் பரோபகாரம் மற்றும் சமூக முன்னேற்றம் ஆகிய துறைகளில் முக்கிய பங்கு வகிக்கின்ற நிறுவனங்களின் தலைவர்களையும், சமூகப் பிரச்சனைகளைக் கையாள்வது மற்றும் நேர்மறையான மாற்றத்தை உண்டாக்குவது போன்ற முக்கிய நோக்கங்களை கொண்டு செயல்படும் நிர்வாகிகளையும், 'ஸ்கோப்' நிறுவனத்தின் இயக்குநர் பத்மஸ்ரீ.M.சுப்புராமன் அவர்களையும், டெல்லி விஷ்வ யுவகேந்திரா திட்ட அதிகாரி திரு.ரஜத் தாமஸ் அவர்களையும், திருச்சி மாவட்ட நல நிதிக் குழு, பொருளாளர் சேவை




திரு.டாக்டர். கே.கோவிந்தராஜு அவர்களையும், திருச்சி தேசிய தொழில்நுட்ப நிறுவனத்தின் (NIT) பேராசிரியர் திரு.டாக்டர்.V.சிவராமகிருஷ்ணன் அவர்களையும் இந்த நிகழ்ச்சியின் சார்பில் வரவேற்பதில் மகிழ்ச்சியடைகிறேன். இந்த நிகழ்ச்சி பயனுள்ளதாக அமைய வாழ்த்துகிறேன்" என்றார்.

திருச்சி, 'ஸ்கோப்' நிறுவனத்தின் இயக்குநர் பத்மஸ்ரீ.M.சுப்புராமன் அவர்கள் பேசும்போது, "கிராமப் பகுதிகளில் தூய்மை, சுகாதாரம் மற்றும் திறந்தவெளி மலம் கழித்தலற்ற நிலையினை உருவாக்கி அனைத்து தரப்பு மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்த ஊக்குவித்தல், பூமியில் இருந்து எடுக்கும் ஒவ்வொறு துளி நீரும் அனை– வருக்கும் பொதுவானது. நாம் நீரை



விரயமாக்கினால் அது வரும் சந்ததியினரை பாதிக்கும். தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்துவது மிக அவசியமான ஒன்று என்று நினைவில் கொள்ளுங்கள். தண்ணீருக்காக அலையாய் அலையும் மனிதர்களை பார்க்கிறோம். அவர்களது கஷ்டங்களை காது கொடுத்து கேட்கிறோம். ஆனால் அவசர அவசரமாக ஓடும் தினசரி நட–வடிக்கைகளில் பலவற்றை எளிதாக மறந்து விடுகிறோம். தேவைக்கு மட்டுமே தண்ணீரை பயன்படுத்துங்கள். நமது இருப்பு மிகவும் குறைவு என்பதை மனதில் நிறுத்திக் கொள்ளுங்கள். என் தாத்தா காலத்தில் ஆற்றில் குளித்தார்கள். அப்பா காலத்தில் கிணற்றில் குளித்தார்கள். இன்றைய காலத்தில் பைப் தண்ணீரில் குளிக்கிறோம். எதிர்காலம் கேள்விக்குறியாகி உள்ளது. எனவே உங்கள் வீட்டில் உள்ள தண்ணீர் உங்களுக்கு மட்டும் சொந்தமானதா? அனைவருக்கும் சொந்தமானது என்ற எண்ணத்தோடு நீரை சேமித்தால் அது நமக்கும் நல்லது. பிறருக்கும் நல்லது. தூய்மையான பாரதத்திற்கு துணையாக நிற் போம். அதில் தொண்டு நிறுவனங்களின் பங்கு முக்கியமானது” என்றார்.

ஓ.பி.ஆர் நினைவுத் தொண்டு அறக்கட்டளை நிறுவனர் Dr.V.செல்வராஜ9 அவர்கள் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கி பேசும் போது, “அறக்கட்டளைகள் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் சமூக நலனை மேம்படுத்துவதிலும், பல்வேறு சமூக பிரச்சனைகளை தீர்ப்பதிலும் முக்கிய பங்கு வகிக்கும் தனி நிறுவனங்களாக செயல் படுகின்றன. அறக்கட்டளையை நிர்வகித்தல், திட்டங்கள், நிதி திரட்டுதல், நன்கொடைகள் மீதான வரி விலக்கு, DARPAN PORTAL, FCRA, CSRன் கீழ் கார்பரேட் நிறுவனங்களில் இருந்து நிதி திரட்டுதல், ஒரு திட்டத்தை ஏற்றுக் கொள்வதன் மூலம் அவ்வப்போது நன்கொடை குறித்த விவரங்களை அறிந்து கொள்வது, நிதி பராமரிப்பது உள்ளிட்ட பல்வேறு விஷயங்களை அறிந்து




கொள்ளவே இந்த நிகழ்ச்சியில் நான் கலந்து கொள்ள வருகை தந்திருக்கிறேன். எனக்கு வாய்ப்பளித்த கிராமியம் திரு.P.நாராயணன் அவர்களுக்கும், விஷ்வ யுவகேந்திரா திட்ட அதி–காரி திரு.ரஜத் தாமஸ் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்” என்றார்.

நிகழ்ச்சியில் தமுகு (Tamuku) நிறுவனத்தின் சார்பில் அதன் நிறுவனர் திரு.T.நரேந்திரன் அவர்கள் கலந்துக்கொண்டு தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் மேம்பாட்டு நிபுணர் களுக்கான விழிப்பூட்டல் குறித்தும், நிலையான நிதி உதவி உத்திகளை உருவாக்கவும், புதுமையான தயாரிப்புகளை வடிவமைக்கவும், எழுதவும் உதவக் கூடியவைகள் குறித்து விளக்கமளித்தார்.

தொடர்ந்து மதுரையைச் சேர்ந்த திரு.ஜான்சன் தங்கராஜ் என்பவர் கலந்து கொண்டு நிறுவனங்கள் எவ்வாறு தமது திட்ட அறிக்கைகளை தயாரிப்பது, வரவுசெலவுகளை எவ்வாறு பராமரிப்பது என்பதை குறித்து விளக்கமளித்தார்.

இரண்டாம் நாள் நிகழ்ச்சியில் Dr.P.பாலமுருகன்



அவர்கள் கலந்து கொண்டு தொண்டு நிறுவனங்கள் நடத்துபவர்களுக்கான திறமை, நிர்வாக மேலாண்மை, தலைமைப் பண்பு மற்றும் திட்டமிடல் குறித்து எடுத்துரைத்தார்.

மூன்றாம் நாள் நிகழ்ச்சியில் தவானி பவுண்டேஷன் சார்பில் கலந்து கொண்ட நிர்வாகி NGO நிறுவனங்கள் எதிர்கொள்ளும் மிகப்பெரிய சவால்கள் குறித்தும், பிறரோடு இணக்கமான செயலாற்றி நம்பிக்கையை வளர்ப்பது குறித்தும், நன்கொடையாளர்கள் எதிர்பார்ப்புகள் பூர்த்தி செய்வது குறித்தும், கொள்கை, உத்திகளை வகுத்தல், சிறப்பாக நடத்தி செல்வது குறித்தும் எடுத்துரைத்தார். நிறைவாக மதுரை ஆடிட்டர் திரு.ஜெயசீலன் அவர்களின் உதவியாளர் சட்டரீதியிலான விஷயங்கள் குறித்து தெளிவுப்படுத்தினார்.

நிகழ்ச்சியில் பல்வேறு தொண்டு நிறுவனங்களும், அரசு சாரா நிறுவனங்களும் கலந்துக்கொண்டு சிறப்பித்தன. பயிற்சியின் நிறைவில் மூன்று நாள் கலந்துக் கொண்ட அனை–வருக்கும் சான்றிதழ் வழங்கப்பட்டது.

நிகழ்ச்சியின் இறுதியில் திரு.K.அண்ணாதுரை அவர்கள் நன்றி கூறினார். இந்த பயிற்சி முகாம் மூலம் தற்போதைய சூழலில் சட்ட திட்டங்களை கடைபிடித்து நடத்துவது குறித்தும், நிதி ஆதாரங்களை திரட்டுவது எப்படி என்பது குறித்தும் விளக்கப்பட்டது. இதில் அபி அறக்கட்டளை இயக்குனர் திரு.மருதநாயகம் அவர்கள் நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார்.




சாத்தூர் நகர வட்டார ரெட்டி நல சங்க பொதுக்குழு கூட்டம் மற்றும் பரிசு அளிப்பு விழா 11.08.2024 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 10 மணிக்கு சாத்தூர் K.K.S.S.N ரெட்டியார் திருமண மஹாலில் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் தமிழ்நாடு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் மாண்புமிகு.K.K.S.S.R.ராமச்சந்திரன் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். கூட்டத்தில் முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர் திரு.K.K.S.S.V.T.சுப்பாராஜ், ஓய்வுப் பெற்ற நீதிபதி திரு.S.சரவணப்பெருமாள், சிவகாசி RSR குழுமங் களின் தலைவரும், தென்மண்டல தலைவருமான தொழிலதிபர் திரு.சண்முகைய்யா ரெட்டியார், விளாத்திகுளம் ரெட்டி ஜன சங்கத் தலைவர் திரு.P.ராமகிருஷ்ணன், செயலாளர் திரு.A.கிருஷ்ணசாமி, திருமதி.தமிழ்செல்வி நந்தகோபால், ஸ்ரீனிவாச பஸ் சர்வீஸ் உரிமையாளர் திரு.அன்புக்கரசன், முருகன் இல்லம் பஸ் சர்வீஸ் உரிமையாளர் திரு.சண்முக ரெட்டியார், அருள்மொழி பஸ் சர்வீஸ் உரிமையாளர் திரு.D.வள்ளுவன் உள்ளிட்ட தலைவர்கள் சிறப்பு விருந்தினர்களாக கலந்துக் கொண்டு சிறப்பித்தனர்.

சாத்தூர் நகர வட்டார ரெட்டி நல சங்கத் தலைவர் திரு.சுந்தரராஜன் அவர்கள் தலைமை தாங்கினார். சங்க செயலாளர் திரு.S.சுப்பிரமணியன் (J.P.Services) அவர்கள் ஆண்டறிக்கை வாசித்தார். சங்கத் துணை தலைவர் திரு.மாரிக்கண்ணு ரெட்டியார் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். சங்கப் பொருளாளர் திரு.C.கேசவன் அவர்கள் நிறைவாக நன்றியுரை நிகழ்த்தினார்.

நிகழ்ச்சியில் 10 மற்றும் 12ம் வகுப்பில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவ, மாணவிகள் தேர்வு செய்யப்பட்டு 12ம் வகுப்பில் முதல் மதிப்பெண் பெற்ற மாணவிக்கு ரூ.4000, இரண்டாம் மதிப்பெண் பெற்றவருக்கு ரூ.3000, மூன்றாம் மதிப்பெண் பெற்றவர்களுக்கு ரூ.2000 பரிசுத் தொகை வழங்கி கௌரவிக்கப்பட்டனர். இதே போல் 10ம் வகுப்பு மாணவ, மாணவிகளுக்கும் ஊக்கத்தொகை வழங்கப்பட்டது. இதில் இரண்டாம் இடத்தை பிடித்த இரண்டு மாணவர்களுக்கு தலா ரூ.3000 வீதம் வழங்கப்பட்டது.

விழாவில் சங்க நிர்வாக கமிட்டியினர், சாத்தூர் நகர மற்றும் வட்டார கிராம சங்க உறுப்பினர்கள் பெருந்திரளாக குடும்பத்துடன் கலந்து கொண்டனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை சாத்தூர் நகர வட்டார ரெட்டி நல சங்கம் சிறப்பாக செய்திருந்தது.

சாத்தூர் நகர வட்டார ரெட்டி நல சங்கத் தலைவர் திரு.சுந்தரராஜன் அவர்கள் தலைமை தாங்கி பேசும் போது, “சாத்தூர் நகரம் மற்றும் வட்டாரத்திற்குட்பட்ட அனைத்து பகுதிகளில் இருந்தும் பெருந்திரளாக பொதுக்குழு மற்றும் பரிசளிப்பு விழா கூட்டத்திற்கு வருகைத் தந்திருக்கின்ற அனைவரையும் அன்போடு வரவேற்பதில் மகிழ்ச்சியடைகிறேன். சமுதாய வளர்ச்சிக்காக புதிய நிர்வாகம் என்றென்றும் உறுதுணையாக இருக்கும். மாணவ, மாணவிகளின் கல்வித்திறன் மேம்பட சங்கம் எல்லா வகையிலும் பாடுபடும். மனிதாபிமானம் ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் முக்கியமானது. எனவே அனைவரின் ஒத்துழைப்போடு பிறருக்கு உதவிகள் செய்வதற் கும், சேவை செய்வதற்கும் புதிய நிர்வாகம் முழுமையாக பாடுபடும். வளர்ந்து வரும் நவீன உலகில் நமது வரலாற்றையும், பண்பாட்டையும் நமது பிள்ளைகளுக்கு சொல்லிக் கொடுத்து வளர்க்க வேண்டும் என இந்தப் பொதுக் குழு கூட்டத்தின் மூலம் கேட்டுக்கொள்கிறேன்” என்றார்.

நிகழ்ச்சியில் தமிழ்நாடு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் மாண்புமிகு.K.K.S.S.R.ராமச்சந்திரன் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்துக் கொண்டு பேசும் போது, “10 மற்றும் 12ம் வகுப்பில் தேர்ச்சிப் பெற்ற மாணவ, மாணவிகளுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். பொதுக்குழு என்பதால் பெற் றோர்களுக்கு சில கருத்துகளை சொல்ல விரும்புகிறேன். நான் 40 ஆண்டுகாலத்திற்கும் மேலாக உங்களோடு பயணித்து வருகிறேன். நம்



மக்களின் நல்லது, கெட்டது என்பது மட்டுமல்லாமல் சமூக வளர்ச்சிக்கும், தேவையான உதவிகளுக்கும் என்றும் நீங்கள் என்னை அணுகலாம். மாணவ, மாணவிகள் பெருமளவில் கூடியிருக்கும் இந்தக் கூட்டத்தில் நான் சொல்ல விரும்புவது என்னவென்றால் பொதுவாக படித்தவர்களிடம் ஒழுக்கம், பண்பு, நேர்மை, நீதி இவைகள் அனைத்தும் ஒருங்கே அமைந்து காணப்படும் கல்வியானது ஒரு மனிதனின் முக்கியத் தேவையாக இருக்கிறது. எந்த ஒரு சமூகமும் கல்வி இல்லாமல் இருப்பது இக்காலத்தைப் பொருத்தவரை மிகவும் தாழ்வா–கவும், இழிவாகவும் கருதப்படும். எனவே கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்து சங்க அமைப்புகளின் மூலம் ஏழை மாணவர்களுக்கு கல்வியை வழங்குவதிலும், கல்விக்கு உதவுவதிலும் முதலாவதாக விளங்கவேண்டும் என கேட்டுக் கொள்கிறேன். கல்விக்கற்றவன் எந்த இடத்திற்கு சென்றாலும் அவன் பிற சமூகத்தால் மதிக்கப்படுகிறான். இதற்கு காரணம் அவன் கற்ற கல்வியே. எனவே கல்வியை கற்று சிறந்த பிரஜையாக வாழ வாழ்த்துகிறேன். என்னால் முடிந்த உதவியை ஏழை மாணவர்களின் கல்விக்காக என்றென்றும் உதவுவேன்" என்றார்.

சிவகாசி RSR குழுமங்களின் தலைவரும், தென்மண்டல தலைவருமான தொழிலதிபர் திரு.சண்முகையா ரெட்டியார் RSR பேசும் போது, "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே, நம்மில் ஒற்றுமை நீங்கின் அனைவருக்கும் தாழ்வே என்பதை மனதில் கொள்ள வேண்டும். நம்மிடையே ஒற்றுமை இல்லாவிட்டால் நாம் பாதுகாப்பை இழந்து விடுவோம். ஒரு கல்லை எடுத்து நாயை நோக்கி வீசினோம் என்றால் அது பயந்து ஓடிவிடுவோம். அதே கல்லை எடுத்து ஒரு தேன்கூட்டை நோக்கி வீசினோம் என்றால் நாம் தான் பயந்து ஓட வேண்டும். பலம் வாய்ந்த நாயினை விட பலம் குறைந்த தேனீக்கள் நம்மை ஓட வைப்பதற்கு காரணம் தேனீக்கள் ஒற்றுமையாக துரத்துவது தான் காரணம். எனவே நமக்குள் சண்டை, சச்சரவுகள் கூடாது. வேறுபாடுகளை கலைந்து அனைவரும் ஒற்றுமையாக இருந்து சங்கத்தை வளர்த்து சமுதாயப் பணி ஆற்ற வேண்டும் என்பது தான் எனது ஆசை. அதற்கு எல்லா வகையிலும் நான் உங்களுக்கு உதவி செய்ய தயாராக இருக்கிறேன்" என்றார்.

ஓய்வுப்பெற்ற நீதிபதி திரு.S.சரவணப்பெருமாள் அவர்கள் கலந்து கொண்டு பேசும் போது, "பெருந்திரளாக கலந்துக் கொண்டிருக்கின்ற சாத்தூர் நகர வட்டார ரெட்டி நல சங்கத்தின் உறுப்பினர்கள் அனைவருக்கும் வணக்கம். இன்று பரிசுப்பெற இருக்கும் மாணவச் செல்வங்களுக்கு வாழ்த்துகள். கல்வியானது சுய முன்னேற்றத்திற்கும், சமூக முன்னேற்றத்திற்கும் மற்றும் தேச முன்னேற்றத்திற்கும் உதவுகிறது. வேலை வாய்ப்புக்கு கல்வி அவசியம். ஒரு நல்ல கல்வி ஒரு கண்ணியமான வாழ்க்கைக்கு சிறந்த வழி. பல ஏழைகளும் கல்வி மூலம் தங்கள் வாழ்க்கையை மேம்படுத்தி கொள்ளமுடியும். பொருளாதார வளர்ச்சிக்கும் மற்றும் சமுதாய வளர்ச்சிக்கும் கல்வி காரணமாக அமைந்துள்ளது. கல்வி அமைதியான வாழ்க்கைக்கும் உதவும். அத்தகைய கல்வியை ஏழை மாணவ, மாணவிகளுக்கு கொண்டு செல்வதற்கு இந்த சங்கம் முழுமையாக பாடுபடவேண்டும். அதற்கு எல்லா வகையிலும் இந்த மேடையில் இருக்கின்ற அமைச்சரும், தலைவர்களும் உறுதுணையாக இருப்பார்கள். நீங்களும் ஒற்றுமையாக இருந்து இதைப் பயன்படுத்திக்கொண்டு சிறந்த சமுதாயத்தை உருவாக்க பரிசுப்பெற வந்திருக்கின்ற மாணவர்கள் பாடுபடவேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்" என்றார்.



மாண்புமிகு .K.K.S.S.R.ராமச்சந்திரன் அவர்களுக்கு விளாத்திகுளம் ரெட்டி ஜன சங்கத்தின் சார்பில் பொன்னாடையை சங்கத் தலைவர் திரு.P.ராமகிருஷ்ணன் அவர்கள் அணிவித்தார். அதுசமயம் அயோத்தி ரெட்டி குல குடும்ப மலர் 2024 புத்தகம் அவருக்கு வழங்கப்பட்டது. நிகழ்ச்சியில் கலந்துக் கொண்டவர்களுக்கு மதியம் கறி விருந்தினை தமிழ்நாடு ரெட்டி நலச் சங்க வடக்கு மண்டலத் தலைவர் சென்னை திரு.R.ஜெயராமன் அவர்கள் வழங்கினார்.

நிறைவாக சங்கப் பொருளாளர் திரு.C.கேசவன் அவர்கள் நன்றியுரை நிகழ்த்தினார்.

# பாலைவனமாவதைத் தடுக்க நிலத்தடி நீர் சேமிப்போம்

**விவசாயப் பகுதி**



நமக்கு குடிதண்ணீர் எங்கிருந்து வருகிறது என்று கேட்டால், பெரும்பாலும் வரும் பதில், கோவை மக்கள் சிறுவாணி என்றும், திருப்பூர் மக்கள் பரம்பி குளம் என்றும், திருச்சி மக்கள் காவிரி ஆறு என்றும், சேலம் மக்கள் மேட்டூர் அணை என்றும், சென்னை மக்களைக் கேட்டால் சென்னையைச் சுற்றியுள்ள ஏரிகள் மற்றும் வீராணம் ஏரி என்றும் பலவகையான குடிநீர் குழாய்களிலிருந்து வீட்டுக்கு வரும் தண்ணீர் வழங்கும் திட்டத்தைத் தான் கூறுவார்கள்.

ஆனால் மழைநீர் எப்படி நிலத்தடி நீராக, குளங்கள், அணைகளில் குடிநீராகச் சேமிக்கப் படுகிறது என்பதைப்பற்றி பெரும்பாலான மக்களுக்குத் தெரியாது. அப்படித் தெரிந்தாலும் இதை அதிகரிக்க வழிகள் என்பது பற்றி சிந்திப்பதும் இல்லை.

தற்போது பருவமழை மாற்றத்தால் ஏற்படும் வறட்சி, இதனால் விவசாயம் செய்ய ஏற்படும் தண்ணீர் பற்றாக்குறை, அதன் மூலம் நெல் போன்ற அதிக தண்ணீர் தேவைப்படும் பயிர்களை விளைவிக்க முடியாமல் போவது, குடிநீர் பற்றாக்குறை, இவை ஒரு அனைத்திற் கும் காரணம் பருவமழை காலத்தில் நாம் தண்ணீரைச் சரியாக சேமிக்க தவறியது தான் முக்கியக் காரணம் ஆகும்.

இந்த நீர் சேமிப்பு தான் ஒரு நாட்டை பாலைவனம் ஆக்கும் பேராபத்தில் இருந்து காக்கக்கூடிய வழிமுறையாகும். ஒவ்வொரு முறையும் பருவமழை பெய்யும்போது நீர் நிலத்தில் உள்ள ஓடைகள், குளம், குட்டை ஆறுகள் என்று அனைத்திலும் சென்று பிறகு கடல் நீரில் கலக்கிறது.

ஒவ்வொரு வருடமும் நாம் வீணாகக் கடலில் சேர்க்கும் நீரின் அளவை கணக்கிட்டுப் பார்த்தால், நீரை நாம் சேகரித்து இருந்தால் வளமான, தண்ணீர் அதிகம் உள்ள மாநிலமாக இருந்திருக்கலாம். கங்கை காவிரி இணைப்பு என்பது கூட நீர்நிலைகளை ஒருங்கிணைப்பதன் மூலம் நீர்வளத்தைப் பெருக்குவதற்காக மேற்கொள்ளப்பட்டதாகும், மழைநீர் சேமிப்பு அல்ல.

தற்போது கோவை மாவட்டத்தை எடுத்துக் கொண்டால் நிலத்தடி நீர் 1000 அடி தாண்டி ஆழமான ஆழ்குழாய் கிணறுகள் மூலம் எடுத்து விவசாயம், குடிநீர் போன்றவற்றிற்காகப் பயன்படுத்துகிறார்கள். குறைந்தது 50 அடி ஆழம் உள்ள கிணறுகள் கடந்த பத்து ஆண்டுகளில் 100 அடி ஆழ கிணறுகளாக மாறி விட்டது. அதிக ஆழம் கிணறு தோண்டிய அல்லது ஆழ்குழாய் கிணறு அமைத்த சிலருக்கு மட்டுமே நீர் கிடைக்கிறது. மற்றவர்கள் கிணறு ஆழப்படுத்த முடியாமல், ஆழ்குழாய் கிணறு தோண்ட முடியாமல் இருப்பவர்களுக்கு நிலத்தடி நீர் கிடைப்பதில்லை. இருக்கின்ற நீரை மட்டும் பயன்படுத்த வேண்டிய நிலையில் சிலர் இருக்கின்றனர். எனவே நீரை சேமிக்காமல், குறைந்து கொண்டே போகும் நீருக்காக சண்டை போட்டுக் கொள்ளும் நிலை தற்போது உருவாகி விட்டது.

ஏன் இந்த நிலத்தடி நீர் குறைபாடு? ஏன் நம்மால் இதைச் சேமிக்க முடியவில்லை? ஒவ்வொரு கிராமத்திலும் குளம், ஏரி போன்ற நீர்பிடிப்பு பகுதிகள் இருக்கும். இவை அனைத்தும் கிராம பஞ்சாயத்துக்கள் நிர்வகிக்கும் முறையில் தான் இருக்கிறது. இந்த ஏரி, குளங்களுக்கு நீர் வருவதற்கு ஓடைகள் இருக்கும்.

நமது ஊரில் 20, 30 ஆண்டுகளுக்கு முன்னால் இருந்த அந்த ஏரி, குளங்கள் அப்படியே அதே அளவில் இருக்கிறதா என்றால், இல்லை. அதன் பரப்பளவும், ஆழமும் குறைந்து போயிருக்கும். ஏரிகளுக்கு வரும் ஓடைகள் முன்பிருந்த அளவில் பராமரிக்கப்பட்டு வந்துள்ளதா? எனக் கேட்டாலும் இல்லை என்றே ஒப்புக் கொள்ள வேண்டியிருக்கிறது.

இதற்குக் காரணம் குடியிருப்புகளின் ஆக்கிரமிப்பும், ஓடைகளில் இருந்து வரும் வண்டல் மண் (Silting) நாளுக்கு நாள் குளம், குட்டைகளில் வந்து படிவதும் காரணம். இதனால் தற்போதுள்ள பெரிய அணைகளின் நீர்தேக்க அளவும் குறைந்து கொண்டு தான் வருகிறது.

மேலும், நாளுக்கு நாள் அதிகரித்து வரும் மக்கள் தொகைப் பெருக்கத்தின் காரணமாக தண்ணீர் தேவையும் அதிகரித்து வருகிறது. புதிதாக கட்டப்பட்டு வரும் போக்குவரத்து சாலைகள், அடுக்குமாடி கட்டிடங்களால் பல நீர் நிலைகளின் இணைப்புகள் துண்டிக்கப் படுகிறது. இதனால் ஏரி, குளத்தில் இருந்து மற்றொரு குளத்திற்கு நீர் செல்ல முடியாமல், வெள்ளப்பெருக்கு, சேதம் ஏற்பட்டு வீடுகளுக்குள் தண்ணீர் புகுந்துவிடுகிறது. ஆறுகளையும், ஓடைகளையும் முறையாக பராமரித்துப்பயன்படுத்தி வந்திருந்தால் நிலத்தடி நீர் தேவையான அளவிற்கு சேமிக்கப்

பட்டிருக்கும்.

ஒவ்வொருவரும் தங்களால் இயன்ற அளவு சிறிய அளவில் தாங்கள் வசிக்கும் வீடுகளில் நிலத்தடி நீரை சேமித்தால் மட்டுமே நாளைய தலைமுறையினர் தண்ணீர் பற்றாக்குறை இன்றி வாழ முடியும். நிலத்தடி நீர் ஆதாரத்தைப் பெருக்க பல முயற்சிகளையும், ஆராய்ச்சி களையும் தனியார் தொண்டு நிறுவனங்கள் செய்து வருகின்றன. ஆனால் அவர்களது முயற்சியானது மக்களின் தண்ணீருக்கான விழிப்புணர்வாக இருந்தால் மட்டுமே எல்லா முயற்சிகளைச் செயல்படுத்த முடியும்.

நிலத்தடி நீர் ஆயிரம் அடிக்கு கீழ் உள்ள இடங்களை சிவப்புப் பகுதி (Red Zone) என அரசு அறிவித்துள்ளது. நிலத்தடி நீர் அபாயகரமான பகுதிகளில் ஆழ்குழாய் கிணறுகள் அமைக்க தடை செய்யப்பட்டு உள்ளது. மேலும் ஏரி, குளங்கள் தூர்வாரும் திட்டம், மலைப்பகுதிகள் நீர் சேமிப்புத்திட்டம், வீடுகளில் நிலத்தடி நீர்த் திட்டம் எனப் பல திட்டங்கள் இருந்தும் நீரின் முக்கியத்துவத்தை அறியாமல் இருப்பது கவலைப்படவேண்டிய விசயமாக உள்ளது.

வானம் பொழிகிறது!
பொழிந்த நீர் எங்கே செல்கிறது?
சிந்திப்போம்! செயல்படுவோம்!!

# உழைப்பே என்றும் உயர்வு தரும்

நாம் உழைக்கும் உழைப்புக்கு ஏற்றவாறு தான் நமக்கு தேவையான பணமும் நிம்மதியான வாழ்க்கையும் கிடைக்கும். சில நொடிகளை கூட வீணாக்காமல் நாம் உழைக்கும் உழைப்பில்தான் நம் குடும்பத்திற்கு தேவையான அனைத்தையும் நிறைவு பெற வைக்க முடியும்.

உழைப்பு அது நம்மைச் சூழும் கவலைகளிலிருந்தும், நம்மை அணுகும் அற்ப துன்பங்களிலிருந்தும், நம்மை தாக்கும் தீய எண்ணங்களில் இருந்தும் விடுதலை அளிக்கிறது.

தனக்கு கிடைக்கும் ஊதியத்தின் மதிப்பை விட தன்னுடைய உழைப்பின் மதிப்பை உயர்த்திக் காட்டும் மனிதன் தான் சமூகத்தில் முன்னேற முடியும் உழைப்பின் பயனை விட உழைப்பே இன்பமாக இருக்கிறது. வெற்றியை விட போராட்டமே இன்பமாக இருக்கிறது. எந்த உழைப்பின் பயனாக உபயோகமான பொருள் ஏதேனும் உண்டாக்கப்படுகிறதோ அதுவே உண்மையான உழைப்பு எனப்படும்.

உழைப்பின் மேன்மையை விளக்கும் அற்புதமான இந்த சம்பவம் ஒரு உதாரணமாக சொல்லலாம் அமெரிக்காவின் புரூக்ளின் பாலம் ஒரு உலக அதிசயம். இடையில் நிறைய தூண்கள் இல்லாமல் இரும்பு கம்பிகளின் பிணைப்புடன் நிற்கும் வித்தியாசமான பாலம் அது. ஜான் ரோப்லிங் என்ஜினியர் அதற்கான வடிவமைப்பை உருவாக்கி கட்ட ஆரம்பித்த போது இது சாத்தியமே இல்லை இப்படியெல்லாம் பாலம் கட்ட முடியாது என நிபுணர்கள் பலரும் தடுத்தனர். ஆனால் ரோப்லிங்கும் அவரது மகன் வாஷிங்டனும் உறுதியாக இருந்து வேலையை ஆரம்பித்தனர். பாலம் கட்டும் பணி பரபரப்பாக ஆரம்பமானது ஆனால் ஒரு மோசமான விபத்து நிகழ்ந்து ரோப்லிங் இறந்துவிட்டார்.

மகன் வாஷிங்டன் படுகாயங்களுடன் பிழைத்தார் ஆனால் அவரால் படுத்த இடத்திலிருந்து அசையக் கூட முடியவில்லை. பேசவும் இயலவில்லை. அவரால் ஒற்றை விரலை மட்டுமே அசைக்க முடிந்தது.

வாஷிங்டன் அந்த ஒற்றை விரல் மூலம் தன் மனைவியுடன் தகவல்களை பரிமாறிக் கொள்ள வழி கண்டுபிடித்தார். விரலால் அவர் காட்டிய செய்கைகள் மனைவிக்கு புரிந்தன. மனைவி மூலம் தகவல் அனுப்பி இன்ஜினியர்களை வரச் சொன்னார் வாஷிங்டன் விரலால் தகவல் சொல்ல வேலைகள் மீண்டும் நடந்தன 13 ஆண்டுகள் தன் விரல் மூலமே அவர் வழிகாட்டுதல்களை சொல்ல பாலம் முழுமை பெற்றது.

140 ஆண்டுகள் கடந்தும் கம்பீரமாக நிற்கிறது அந்த பாலம். மோசமான தருணங்களிலும் முயற்சியைக் கைவிடக்கூடாது தொடர்ந்து உழைத்தால் எதுவும் சாத்தியம் என்பதே புரூக்ளின் பாலம் சொல்லும் பாடம். உழைப்பின் மேன்மையை பார்த்தீர்களா. உழைப்பே என்றும் உயர்வு தரும்.


ரெட்டி இளைஞர் பேரவை நடத்தும்

## ரெட்டி திருமணத் தகவல் மையம்

எண் : 34A, கங்கையம்மன் கோவில் தெரு, ஜாபர்கான்பேட்டை, சென்னை - 600 083.
044 - 2485 3333, 9688877700,
E-mail Id : reddymatrimonired@gmail.com |
For Online Registration Website : www.reddymatrimony.co.in
நிறைவான சேவைக்கு சரியான சாய்ஸ் இம்மையம்.
வேலை நேரம் : காலை 10.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை
(வார விடுமுறை கிடையாது)

# உயர்ந்த தெய்வ பக்தி

சிறப்பு கட்டுரை

'கடவுளை நம்பினோர் கைவிடப்படார்', இதுவே பக்தி. நம் உள்ளத்தில் கடவுளை முழுமையாக உண்மையாக நிலைநிறுத்தினால் கவலையும் பயமும் அங்கிருந்து வெளியேறி ஆனந்தம் கிட்டும். இறைவழி வழிபாட்டினை பொருத்த மட்டில் எக்காலத்திலும் சமூகத்தில் மனிதர்களை மூன்று பிரிவினராக பிரிக்கலாம்.

1. ஆன்மீகக் கருத்துகள் என்கிற ஞானத்தை உள்வாங்கி உணருபவர்கள்.
2. சடங்குகளை மட்டுமே கருத்தில் கொள்பவர்கள். மக்களில் பெரும்பாலானோர் இப்பிரிவினரே.
3. நாத்திகர்கள்.

சில சமயங்களில் இரண்டாவது பிரிவினரின் சில செய்கைகளால் மூன்றாவது பிரிவினர் வலுவடைகின்றனர். சமூகத்தில் உள்ளார்ந்த ஆன்மீகக்கருத்துப் பரவல் குறையும் காலங்களில் குழப்பங்கள் மேலோங்குகிறது. அதுபோன்ற சமயங்களில் சங்கரர் போன்ற மகான்கள் தோன்றி இந்து தர்மத்தின் மீது மண்டிவிட்ட மாசுகளை நீக்கி, அதன் உள்ளார்ந்த தத்துவ சிறப்புகளை மீண்டும் வெளிக்கொணர்ந்து மக்கள் பயன் பெறச்செய்கிறார்கள்.

உலகில் உள்ள உயிருள்ள, உயிரற்ற பொருட்கள் அனைத்தும் இறைவன் படைப்புகளே. மேலும் இவை இறைவன் எனும் பரபிரம்மத்தின் அம்சங்களே. நம் அனைவரிடமுள்ள ஆன்மாவும் பிரம்மத்தின் கூறுகளே ஆகும். இதனை ஆதிசங்கரர் **'தத் த்வம் அஸி'** என்ற சொற்றொடர் மூலம் **நம்முள் இறைவன் இருக்கிறான்** என்று எளிதாக விளக்குகிறார். நனைவு நிலையில் புறத்தே உள்ளவைகள் அனைத்தையும் புலன் உறுப்புகளால் உணர்கிறோம். கனவு நிலையில் இவை அனைத்தும் மறைந்து, அகத்தே உள்ள எண்ணங்கள் அடங்கிய உலகம் விரிகிறது. ஆனால் ஆழ்ந்த உறக்க நிலையில் நனவு நிலையில் உள்ள புற உலகமும் கனவு நிலையில் உள்ள அக உலகமும், இரண்டுமே தெரிவதில்லை. இங்கு உறக்கம் என்பது ஒரு வெறுமையான சூனிய நிலை அன்று. அதாவது உடல் கோமா நிலையில் இல்லை. இங்கு 'நான்' என்ற பிரக்ஞை தன்னுணர்வு உள்ளது. உடல், மனம் கழித்த பிறகு நம்முள் எஞ்சியுள்ள இந்த தன் உணர்வே உபநிடதங்களில் ஆத்மா என்றும் பிரம்மம் என்றும் குறிப்பிடப்படுகிறது.

இந்த நிலையான, உண்மையான ஆத்மாவே மனசாட்சி. மனதில் எண்ணங்கள் நல்லதும், கெட்டதும் வந்து போகும். எண்ணங்களின் இத்தன்மை தனிநபர் குணத்தாலும், வாழும் சூழலாலும் மாறுபடுகிறது. கெட்ட எண்ணங்கள் வரும் போது ஆத்மாவிற்கும் மனதிற்கும் இடையே நடைபெறும் மனப்போராட்டத்தில் ஆத்மா வென்றால் நல்லவனாகிறான், முடிவில் புண்ணிய கணக்கு உயர்கிறது. மனம் வென்றால் சபலம் வெல்கிறது, பாவக் கணக்கு கூடுகிறது.

மனதில் சஞ்சலம் தோன்றுவது இயல்பு. ஆனால் அதனை மன உறுதியாலும் பழக்கத்தினாலும் கட்டி விடலாம் என்று கிருஷ்ண பகவான் கீதையில் (அத் 6, சுலோ 35) கூறுகிறார். இதற்கு இறைவனை மனதில் அமர்த்த வேண்டும். வெளிச்சம் வந்தால் இருள் மறையும். அதுபோல இறைவன் உள்ள போது சைத்தான் ஓடிவிடும். இறைவனை மனதில் அமர்த்துதல் மிகவும் அவசியம். சிலர் சொல்லிலும் செயலிலும் தூய்மையாக இருப்பார்கள். ஆனாலும் சில நேரங்களில் அசுத்த எண்ணங்கள் வந்து செல்லும். மனதில் குடி கொண்டிருக்கும் இறைவனை நினைத்தால் நாம் கண்காணிக்கப் படுகிறோம் என்ற அச்சத்தில் மனம் சுத்தமாகி எண்ணம், சொல், செயல் மூன்றிலும் தூய்மை பெறுவோம், நல்லவனாகிவிடுவோம். நல்லவனை நல்லவர்களே சூழ்வார்கள். சமுதாயம் முழுவதும் இவ்வாறு இருந்தால் போலீசுக்கும் கோர்ட்டுக்கும் வேலை குறைவு.

அடுத்து இறைவனை எப்படி ஆத்ம பூர்வமாக வணங்குவது என்பதைப் பார்ப்போம். நாம் சாமி கும்பிடும் முன் அல்லது பூஜை செய்யும் முன் குளித்துவிட்டு, சுத்தமான உடையணிந்து, சாமியிடத்தை சுத்தம் செய்துவிட்டு, படைக்கப்படும் பலகாரம் எச்சில் படாமல் அதாவது படைக்கும் முன்பு யாரும் ருசி கூட பார்க்காமல் சாமியின் முன்பு வைக்கிறோம். பழங்கள் நல்லவைகளாகப் பார்த்து வைக்கிறோம். கற்பூரம் ஏற்றுகிறோம், கண்களில் ஒத்திக்கொண்டு விபூதி இட்டுக் கொண்டு வாயளவில் ஏதேனும் முணுமுணுத்து சாமியைக் கும்பிடுகிறோம்.

இதுவரை அங்கு இறைவன் இருக்கிறான் என்ற உணர்வில் இவைகளை செய்துவிட்டு இறைவனிடம் எதுவும் பேசாமல் அனிச்சைச் செயலாக (Reflex) கன்னத்தில் போட்டுக்கொண்டு சடங்கை முடித்துவிடுகிறோம். இங்குதான் குறைபாடு. இறைவன் உண்மையில் இருக்கிறார் என்றால் பேச வேண்டாமா? நடந்தவைகளுக்கு நன்றி சொல்ல வேண்டாமா? நடக்க இருப்பவை களுக்கு துணை நிற்க கோர வேண்டாமா? நாம் செய்யும் தவறுகளை/குறைகளைச்சொல்லி அவற்றை மீண்டும் வராமல் தவிர்க்க துணை நிற்க கெஞ்ச வேண்டாமா? இதுதான் சரியான முறை. இங்கு நாம் வணங்குவது சாமிப் படமோ விக்கிரகமோ இல்லை, இறைவனே உண்மையில் நேரில் இருப்பதாக எண்ண வேண்டும். இது எப்போது சாத்தியமாகும்? 24 மணி நேரமும் இறைவன் நமது இதயத்தில் இருக்கிறான் என்றும், அவன் வழிகாட்டுதலில் தான் நாம் எதையும் செய்கிறோம் என்றும் நினைக்கின்ற பக்குவம் வந்துவிட்டால் இது சாத்தியமாகும்.

இறைவனை வணங்குவதிலும், வழிபாடு செய்வதிலும் இருக்கும் தீவிரமும், ஆழமுமே முக்கியமானவை. நினைக்கும் போது கண்ணீர் துளிரும். இதுவே உயர்ந்த தெய்வ பக்தி. இப்போது எண்ணங்கள் சுத்தமாகி மனிதன் உயர்ந்து நிற்கிறான். **கவலையும் இல்லை, பயமும் இல்லை.** ஏனெனில் ஒவ்வொரு நொடியும் இறைவனால் நாம் பாதுகாக்கப்படுகிறோம் மற்றும் வழிநடத்தப்படுகிறோம் என்ற எண்ணம் தோன்றி விடும். நாம் ஒவ்வொருவரும் கர்மா என்னும் விதியின்படி பூமியில் பிரயாணம் செய்கிறோம். விதியை வெல்லமுடியாதா? வெல்லமுடியும்.

இறைவன் உறவால் தோன்றும் மதியால் வெல்லலாம். பக்தியில் உயர்ந்து நிற்போம், வருவதை மனநிறைவோடு ஏற்போம், பேரானந்தம் கொள்வோம்.

R.இராஜசேகரன், விழுப்புரம்.

# தூக்கி எறி.... மன கலக்கம் தீரும்

**ஆன்மீகப் பகுதி**

அந்த மஹான் மிகவும் சக்தி உள்ள பெரிய ஞானி என்று கேள்விப்பட்ட செல்வந்தன் ஒருவன், ஆயிரம் பொற்காசுகளை எடுத்துக்கொண்டு, அவருக்கு பரிசளிப்பதற்காக, அவரைப் பார்க்கப் போனான்.

ஆனால், அவர், எனக்கு இவை எல்லாம் தேவை இல்லை என்று சொல்லி விட்டார். அதற்கு அந்த செல்வந்தன்,

'எனக்கு அவ்வப்போது மனதில் கலக்கமும், தேவை இல்லாத துயரமும், சஞ்சலமும் ஆட்கொள்கிறது. அதைதான் உங்களிடம் சொல்ல வந்தேன். வெறும் கையுடன் வருவதற்கு மனமில்லாமல் இந்த பொற்காசுகளை கொண்டு வந்தேன். தவறாக நினைக்க வேண்டாம்' என்றான்.

'சரி. உன் மனதை மேலும் காயப்படுத்த விரும்பவில்லை. அதனால், இதனைப் பெற்றுக் கொள்கிறேன்.' என்று சொன்ன ஞானி, அந்த பொற்காசுகளை கையில் வாங்கிக் கொண்டார்.

'இனிமேல் இந்த பொற்காசுகள் என்னுடையது தானே? உனக்கு இனி சொந்தமில்லையே?' ஆமாம். ஆயிரம் பொற்காசுகளையும் தங்களிடம் கொடுத்துவிட்டேன். இனி, இவை உங்களுடையது தான்' என்றான் செல்வந்தன்.

'அப்படியானால் ஒன்று செய். இந்த ஆயிரம் பொற்காசுகளையும், அதோ அந்த நதியில் வீசி விட்டு, என்னிடம் வா என்றார் ஞானி. செல்வந்தன் அதிர்ச்சி அடைந்தான். இருப்பினும், வேறு வழியில்லாமல் ஞானியிடம் பொற்காசுகளை வாங்கிக்கொண்டு, அந்த செல்வந்தன், நதியை நோக்கி நடந்தான்.

வெகு நேரம் ஆகியும் செல்வந்தன் திரும்ப வராதது கண்டு, ஆற்றங்கரைக்கு சென்றார் ஞானி. அங்கு அந்த செல்வந்தன் தன்னிடமிருந்த பொற்காசுகளை ஒவ்வொன்றாக எண்ணியபடி ஆற்றில் வீசிக் கொண்டிருந்தான்.

ஞானியை பார்த்ததும் எழுந்து நின்று வணங்கினான். 'என்ன செய்து கொண்டிருக்கிறாய்? தூக்கி எறிந்து விட்டு வர சொன்னேன் இல்லையா? உண்மைதான். ஆனால் இவை எல்லாம் எனது சம்பாத்தியம். உங்களுக்கு உபயோகப்படும் என்று நினைத்து தான் தங்களிடம் எடுத்து வந்தேன். இப்போது ஆற்றில் வீசுவதற்கு மனமில்லாமல் வீசிக் கொண்டிருக்கிறேன்' என்றான்,

ஞானி அமைதியாக சொன்னார். 'அதுபோல தான் உன் மனதின் கலக்கமும், துயரமும் உனது சம்பாத்தியம்தான். ஆனால் அவை உன்னுடையது அல்ல. இருந்தாலும், உன் மனம் தன்னுடைய சொந்த சொத்து போல கலக்கங்களையும், துயரங்களையும் முழுவதுமாக தூக்கி எறிய மறுக்கிறது.

இவை நமக்குத் தேவை இல்லை. இவைகள் எல்லாம் இழக்கப்பட வேண்டியவை என்று எதை நாம் மனதால் நினைக்கிறோமோ, அதை மனதில் இருப்பதை எல்லாம் முழுவதையும் ஒரே முறையில் தூக்கி எறிந்து இழந்து விட வேண்டும். எண்ணிக்கொண்டு, மெல்ல மெல்ல இழந்துக் கொண்டிருப்பது சுத்த மூடத்தனம். இதை மனதில் பயிற்சிசெய். இனி உன் வாழ்வில் வரும் மனக்கலக்கங்களும், துயரங்களும் அவை செல்லுமிடம் உனக்கேத் தெரியாமல் சென்று விடும்' என்றார் ஞானி.

ஞானியை மீண்டும் தொழுதார் செல்வந்தன்.

# கோயிலில் உடைக்கும் தேங்காய் அழுகியிருந்தால் என்ன அர்த்தம் தெரியுமா?

பொதுவாக எல்லோரும் சாமிக்கு உடைக்கும் தேங்காயை பார்த்து பார்த்து கடையில் வாங்குவோம். ஏன் என்றால் சாமிக்கு உடைக்கும் தேங்காய் நல்லதாக இருக்க வேண்டும் என்பதற்காகவே. ஒருவேளை தேங்காய் சரியாக உடையவில்லை என்றாலோ அல்லது அழுகி இருந்தாலோ என்ன அர்த்தம் தெரியுமா? வாருங்கள் பார்ப்போம்.

### தேங்காய் அழுகி இருந்தால் என்ன அர்த்தம்?

தேங்காயில் இருக்கும் மூன்று கண்களில் முதல் கண் பிரம்மன், இரண்டாவது கண் லஷ்மி, மூன்றாவது கண் சிவன் என்பது பொதுவான நம்பிக்கை. இத்தகைய சிறப்பு மிக்க தேங்காயை சுவாமிக்கு உடைக்கும்போது அது அழுகி இருந்தால் அது ஒரு மிக பெரிய அபசகுனம் என்று கருதி மக்கள் வருத்தப்படுவது வழக்கம். ஆனால் உண்மை என்னவென்றால் தெய்வத்திற்கு உடைக்கப்பட்ட தேங்காய் அழுகி இருந்தால் அது நன்மையே. இதன் மூலம் தீய சக்திகள், பீடை, கண்திருஷ்டி போன்றவை அகன்று போகும் என்று கூறப்படுகிறது.



### தேங்காய் கொப்பரையாக இருந்தால் என்ன அர்த்தம்?

தெய்வத்திற்கு உடைக்கப்பட்ட தேங்காய் கொப்பரையாக இருந்தால் அந்த வீட்டில் ஏதோ சுபகாரியம் நடக்கப்போகிறது என்று அர்த்தம்.

### தேங்காயில் பூ இருந்தால் என்ன அர்த்தம்?

தெய்வத்திற்கு உடைக்கப்பட்ட தேங்காயில் பூ இருந்தால் அது ஒரு நல்ல சகுனமாக கருதப்படுகிறது. மேலும் இதனால் பணவரவு, நல்ல லாபம், எதிர்பாராத நல்ல விஷயங்கள் போன்றவை நடக்கும் என்பது நம்பிக்கை.

# NATIONAL ENGINEERING COLLEGE

(An Autonomous Institution - Affiliated to Anna University, Chennai)
K.R. NAGAR, KOVILPATTI – 628503
+91 9385976674 / +91 9385976684 / 04632 - 222502 www.nec.edu.in principal@nec.edu.in

THIRU K.RAMASAMY 1936 - 2019
ESTD : 1984

39 YEARS OF ACADEMIC EXCELLENCE 2022 - 2023

TNEA COUNSELLING CODE 4962

## COURSES OFFERED

### UG

- B.E. - Mechanical Engineering *
- B.E. - Electronics & Communication Engineering *
- B.E. - Computer Science and Engineering *
- B.E. - Electrical & Electronics Engineering *
- B.Tech. - Information Technology *
- B.E. - Civil Engineering
- B.Tech. - Artificial Intelligence and Data Science

### PG

- M.E. - Energy Engineering
- M.E. - Embedded Systems Technologies
- M.E. - Computer Science and Engineering
- M.E. - High Voltage Engineering
- M.Tech. - Information Technology (Information and Cyber Warfare)

## PLACEMENT STATUS

For 2022 Batch
95% Placement

For 2023 Batch
200+ Offers
175+ Internship Offers
as on 05th September 2022

## ON CAMPUS INDUSTRY

Mistral Solutions, Bangalore
Brimma Tech, USA

95% CONSISTENT PLACEMENT | 150+ COMPANIES | 625+ OFFERS | 15 LPA HIGHEST SALARY




NEC Special Features

- ARIIA 2021 Band - Excellent 10th Rank (All India Level) Under Private or Self Financial Technical Institutes Category
- INSTITUTION'S INNOVATION COUNCIL 4 STAR RATING
- DST - FIST Sponsored
- K.R. Innovation Centre
- NewGen IEDC, DST, New Delhi
- NBA Accredited*
- NAAC Accredited with Grade A
- nirf Rank - 169

### FEW OF OUR PRESTIGIOUS RECRUITERS

amazon, TATA CONSULTANCY SERVICES, ZOHO, Cognizant, accenture, Infosys, HCL, VVDN Technologies, TESSOLVE A Hero Electronix Venture, wipro, DATA PATTERNS, MISTRAL ... Partners in Real Time, Brakes India Private Limited, Capgemini, Centizen, ELITE Constructions, embed UR, vuram, HEXAWARE, Tech Mahindra

# Lakshmi Ammal Polytechnic College

(Approved by AICTE, New Delhi and Directorate of Technical Education, Tamil Nadu)
Ph: 04632 - 222506, 63819 20408 352lapc@gmail.com / principal@lapc.in www.lapc.in.

39 YEARS OF ACADEMIC EXCELLENCE 2022 - 2023

COURSES OFFERED

- Civil Engineering
- Mechanical Engineering
- Automobile Engineering
- Electronics & Communication Engineering
- Electrical & Electronics Engineering

# K.R. College of Arts & Science

Ph: 04632 - 248 981, 222 981 principal@krcollege.net www.krcollege.net


COURSES OFFERED

UG
B.A. - English B.Com. - Professional Accounting
B.Sc. - Computer Science, Bio Chemistry, Micro Biology & Mathematics

PG
M.Sc. - Computer Science
M.Sc. - Micro Biology

# KR Kayaar Exports Private Limited

(Spinning Unit)
Railway Feeder Road, K.R.Nagar, Kovilpatti - 628 503, Thoothukudi Dist, Tamil Nadu, India
Ph: 04632-222510, 248258, 94425 38774 ttn_krgroup@yahoo.com, ttnkrgroup@gmail.com




ரெட்டி இளைஞர் பேரவை நடத்தும்

# ரெட்டி திருமணத் தகவல் மையம்

எண் 34A, கங்கையம்மன் கோவில் தெரு, ஜாபர்கான்பேட்டை,
சென்னை - 600 083. காசி தியேட்டர் எதிரில், காமராஜ் சிலை அருகில்
044 - 2485 3333, 96888 77700 E-mail : reddymatrimonired@gmail.com,
for online Registration website : www.reddymatrimony.co.in


## மணமகள்

| எண் | பதிவு எண் | பிறந்த தேதி | படிப்பு | நட்சத்திரம் | பணியிடம் | வருமானம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | G 7422 | 29.03.1999 | B.E. | மகம் | Develops Engineer | Rs.10 Lakhs / PA |
| 2 | G 7423 | 10.10.1999 | B.Sc.MCA.MA | சித்திரை | IT Company | Rs.40,000/- PM |
| 3 | G 7424 (Divorcee) | 19.09.1990 | B.E. | பூரம் | Private Company | —— |
| 4 | G 7425 | 27.07.1998 | Deg.in Visual Arts, Mas.in Arts | பூரம் | —— | —— |
| 5 | G 7426 | 08.03.2000 | B.E. | ரேவதி | —— | —— |
| 6 | G 7427 | 12.03.2001 | M.Sc. | சித்திரை | —— | —— |
| 7 | G 7428 | 04.01.2002 | Master of Psychology | பூரம் | Assistant Professor | Rs.3 to 4 Lakhs / PA |
| 8 | G 7429 | 10.05.1997 | B.E. | மிருகசீரிஷம் | Private Sector | Rs.8 Lakhs / PA |
| 9 | G 7430 | 14.12.2000 | M.Sc. B.Ed. | பூசம் | —— | —— |
| 10 | G 7431 | 11.12.1999 | B.E. | உத்திராடம் | Software Engineer | Rs.35,000/- PM |
| 11 | G 7432 | 30.03.1995 | B.Tech. | உத்திரட்டாதி | —— | —— |
| 12 | G 7433 | 22.12.1997 | B.Sc.M.Sc. | அஸ்தம் | Clinical Psychologist | —— |
| 13 | G 7434 | 29.04.1997 | B.E. | உத்திராடம் | Software Developer | Rs.14 Lakhs / PA |
| 14 | G 7435 | 14.01.2002 | B.Sc. MCA | உத்திராடம் | —— | —— |
| 15 | G 7436 | 22.12.1991 | M.Sc.B.Ed.CA MBA | புனர்பூசம் | Private Company | —— |
| 16 | G 7437 | 30.09.1997 | ACCA | உத்திரம் | Audit Senior | Rs.70-80,000/ PM |

## ரெட்டி மலர் ஏன் வாங்க வேண்டும்?

☞ ரெட்டியார் சமுதாய முன்னேற்றத்திற்கும், ஒற்றுமையை வலியுறுத்துவதற்கும், ஒருவரோடு ஒருவர் தொடர்பு கொள்ளவும் ரெட்டி மலர் இதழ் தேவை.

☞ மாதந்தோறும் உங்கள் இல்லம் தேடி சமூக, சங்க செய்திகளை உடனுக்குடன் வழங்கி வருகிறது ரெட்டி மலர்.


☞ நம் ரெட்டியார் சமூகத்தில் நடக்கும் உண்மை சம்பவங்கள், நிகழ்வுகள் மட்டுமே இதில் பிரசுரமாகிறது.

☞ தொடர்ந்து 18 ஆண்டுகள் கொரோனா காலம் தவிர மாத இதழாக வெளிவந்துக் கொண்டிருக்கிறது.

☞ வியாபார நோக்கமில்லாமல் நம் சமூகம், கலாச்சாரம், பண்பாடு என அனைத்து தளங்களிலும் தகவல்களை திரட்டி வெளியிடுகிறது.

☞ ஓ.பி.ஆரின் வாழ்க்கை வரலாற்றை 'உத்தமர் ஓமந்தூரார் வாழ்க்கைத் தொடர்' என்ற தலைப்பில் 23 மாதங்களாக தொடர்ந்து வெளியிட்டு பிறரும் அறிந்து கொள்ள உதவியிருக்கிறது.

☞ ரெட்டி மலர் வளர்ச்சிக்கு உங்கள் பங்களிப்பையும் வழங்கலாமே.



ரெட்டி இளைஞர் பேரவை நடத்தும்

# ரெட்டி திருமணத் தகவல் மையம்

எண் 34A, கங்கையம்மன் கோவில் தெரு, ஜாபர்கான்பேட்டை,
சென்னை - 600 083. காசி தியேட்டர் எதிரில், காமராஜ் சிலை அருகில்
044 - 2485 3333, 96888 77700 E-mail : reddymatrimonired@gmail.com,
for online Registration website : www.reddymatrimony.co.in

## மணமகன்

| எண் | பதிவு எண் | பிறந்த தேதி | படிப்பு | நட்சத்திரம் | பணியிடம் | வருமானம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | B 11190 | 20.06.1992 | BBA | அவிட்டம் | Own Photo Studio | Rs.40,000/- PM |
| 2 | B 11191 | 18.08.1987 | B.Tech. | ரோகிணி | USA | Rs.60 Lakhs / PA |
| 3 | B 11192 | 14.11.1997 | B.E. MBA | பரணி | CBW Bank | Rs.10 Lakhs / PA |
| 4 | B 11193 | 08.05.1997 | B.Sc. | கிருத்திகை | IT Company | Rs.1.10 Lakhs / PM |
| 5 | B 11194 | 04.06.1997 | B.E. | கிருத்திகை | Tech Mahindra | Rs.11 Lakhs / PA |
| 6 | B 11195 | 18.04.1997 | B.E. | பூரம் | Software Engineer | Rs.1.30 Lakhs / PM |
| 7 | B 11196 | 26.02.1996 | DME | ரோகிணி | VMC Programmer | Rs.35,000/- PM |
| 8 | B 11197 (Divorcee) | 08.06.1988 | B.E. | உத்திரட்டாதி | USA | $1.40 Lakhs / PA |
| 9 | B 11198 | 20.07.1994 | B.Tech. | கேட்டை | TCS | Rs.12 Lakhs / PA |
| 10 | B 11199 | 24.09.1994 | B.E. | பரணி | HDFC Bank | Rs.45,000/- PM |
| 11 | B 11200 | 21.04.1994 | DME | மகம் | Singapore | Rs.12 Lakhs / PA |
| 12 | B 11201 | 06.01.1997 | B.Tech. | அனுஷம் | Software Engineer | Rs.1.50 Lakhs / PM |
| 13 | B 11202 | 28.12.1996 | B.E. | பூசம் | SH Electronics | Rs.4.5 Lakhs / PA |
| 14 | B 11203 | 06.06.1994 | DME. B.E. | பரணி | Private Company | Rs.30,000/- PM |
| 15 | B 11204 | 15.07.1993 | B.E. MBA | கார்த்திகை | Programme Leader | Rs.1 Lakh / PM |
| 16 | B 11205 | 22.09.1997 | B.E. MS | மிருகசீரிஷம் | USA | $ 9000 / PM |
| 17 | B 11206 | 15.01.1997 | B.E. | ரேவதி | Manager | Rs.6 Lakhs / PA |
| 18 | B 11207 | 29.04.1996 | B.Tech.MS | உத்திரம் | Australia | Rs.65 Lakhs / PA |
| 19 | B 11208 | 31.10.1996 | B.Com.MBA | திருவாதிரை | Sales Incharge | Rs.30,000/- PM |
| 20 | B 11209 | 24.10.1993 | B.E. | அவிட்டம் | Software Development Engineer | Rs.15 Lakhs / PA |
| 21 | B 11210 | 04.09.1992 | BE, M.S. | கேட்டை | USA | Rs.9 Lakhs / PM |
| 22 | B 11211 | 25.05.1996 | DME BCA | மகம் | Assistant Engineer | Rs.5-6 Lakhs / PA |
| 23 | B 11212 | 21.11.1992 | B.E. MBA | அஸ்தம் | Govt.Job, Secretariat | Rs.45,000/- PM |

# ஓ.பி.ஆர் அறக்கட்டளை சார்பில் 78வது சுதந்திர தின விழா









REDDY MALAR, Tamil Monthly, RNI No. TNTAM/2006/18783, R.Dis.No.63/2021
Date of Publication : 1st week of Every Month




Printed by S.SUNDAR RAMAN and Published by V.SELVARAJU on behalf of REDDY ELAINGER PEREVAI and Printed at VASAN PRINT MFG CO, 29, Dr.Besant Road, Chennai - 600 014 and Published at New No.34A, Old No.36/1A, Gangai Amman Koil Street, Jafferkhanpet, Chennai - 600 083. Editor : R.RAJASEKARAN.